விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 26 சித்திரை 24 ஷஃபான் 4 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6—5—84 இதழ் 81

University of Jaffna, Sri Lanka — Received — 7-5-1984 — Library

## 12ம் திகதி காலை துணைவேந்தர் மணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் அறுபதாவது பிறந்தநாள் மணிவிழாவை "கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்" அமைப்பு மே மாதம் 12ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பெருவிழாவாகக் கொண்டாடவுள்ளது.

## 'வித்தி'யின்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில், இலங்கை உதயன் பத்திரிகையாளர் சங்கத்தலைவர் திரு. இ. சபாரத்தினம் [illegible] தலைமையில் இவ்விழா நடைபெறும். அரசாங்க அதிகாரிகள், பேராசிரியர்கள், கல்விமான்கள் பலர் விழாவில் பாராட்டுரை வழங்குவர்.

பேராசிரியரின் சமூக, சமய, கலை, கலாச்சார, தமிழ், கல்வி,

(16ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் பிரச்னை: இந்திராவுடன் நடத்திய பேச்சில் எம். ஜி. ஆர். திருப்தி

## இந்திய மீனவர் மீதான தாக்குதல் மற்றும் ஆலோசனை

(புதுடில்லி)

இலங்கைத்தமிழர்பிரச்னை தொடர்பாக பிரதமர் இந்திரா காந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனுடையதாகவும், மனத்திருப்தியை தருவதாகவும் இருந்தது என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் திரு. ராமச்சந்திரன் தலைமையில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் குழு பிரதமர் இந்திரா காந்தியை நேற்று சந்தித்து சுமார் 45 நிமிடங்களுக்கு இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியது. இப்பேச்சுக்களின் பின்னர் நிருபர்கள் மத்தியில் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

### எவராலும் முடியாது

இப்பேச்சுக்கள் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எம். கல்யாணசுந்தரம் குறிப்பிடுகையில் இலங்கையில் உருவெடுத்துள்ள இனப் பிரச்னையை இந்திரா காந்தி தக்க சமயத்தில் தீர்த்து வைப்பார் என்றும் இப்பிரச்னை அவசியமான தீர்க்க முடியும் [illegible] தீர்க்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

பேச்சுக்களின் போது அரசியல் கட்சி பிரதிநிதிகள் தமது தனிப்பட்ட கருத்துக்களையும், பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் பிரதமரிடம் விளக்கி கூறினார்கள். இலங்கைத் தமிழர் பிரச்னையை இந்திரா அனுதாபத்துடன் கேட்டதாகவும், அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கத்தக்க வழிவகைகளை மேற்கொள்வதாகத் தம்மிடம் தெரிவித்ததாகவும் அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### இந்திய மீனவர்

இதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படை

(6-ம் பக்கம் பார்க்க)



## ராகேஸ் சர்மா நாடு திரும்பினர்

புதுடில்லி, மே 5

இந்திய விண்வெளிவீரர் ராகேஸ் சர்மா, அவருடன் பயிற்சிக்கு சென்றிருந்த ரவீஷ் மல்கோத்திரா மற்றும் இந்திய விண்வெளிக்குழுவினர் நேற்று புதுடில்லி திரும்பினார்கள்.

நாடு திரும்பிய விண்வெளி வீரர் ராகேஸ் சர்மா விமான

(16ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு எதிராக இலங்கையை அமெரிக்கா தூண்டி வருகிறதாம்

### பீட்டர் கெனமன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்தியாவுக்கு எதிராக இலங்கையை தூண்டிவிடும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் குற்றஞ்சாட்டியுள்ளார். சர்வதேச ஒருமைப்பாட்டுக்கான நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராட்டில் [illegible] பிரச்னைகளை அமெரிக்கா உருவாக்கி வருகிறது. இதன் ஒரு அம்சமாகவே இலங்கையிலும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகிறது.

பல ஒப்பந்தங்களை மேற்கொண்டதன் மூலம் இலங்கையைத் தன் பக்கமாக இழுத்து வருகின்றது.

குறிப்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வரலாற்று ரீதியாக இருந்துவரும் சமூக, கலாச்சார உறவுகளை அமெரிக்கா சீர்குலைக்க திட்டமிட்டுள்ளது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஏப்ரல் 30க்கு பின்னரும்— வேலைக்குத் திரும்பாத ஊழியர்களின் விபரம்

### பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு கோருகிறது

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் கொடுத்த காலக்கெடுவான ஏப்ரல் 30-ம் திகதிக்கும் பின்னரும் வேலைக்குத் திரும்பாத பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விபரங்களை பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு திரட்டி வருகிறது. இந்த ஊழியர் களுக்குத் தகுந்த நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு இணைப்புக்குழு புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதாக வேலைக்குத் திரும்பாத பாதிக்கப்பட்ட ஊழியர்கள் விபரங்களைத் தபாலில் அனுப்புமாறு கோரியுள்ளனர். விபரங்களைச் செயலாளர், 95/1, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (யா)

## கைவிட்ட நிலையில் போட்டோபிரதி எடுக்கும் கருவி

(யாழ்ப்பாணம்)

போட்டோபிரதி எடுக்கும் கருவி ஒன்று நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வீதியில் நேற்றுக்காலை அநாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் யாழ்ப்பாண நகர் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்குச் சொந்தமானதெனக் கூறப்பட்டுள்ளது. போலீசார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு குருநகர் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் நுழைந்த ஐந்து நபர்கள் துப்பாக்கி முனையில் போட்டோ பிரதி பண்ணும் இயந்திரம் ஒன்றை கொள்ளையடித்துச் சென்றது தெரிந்ததே.

கைலாசபிள்ளையார் கோவிலடியில் கண்டெடுக்கப்பட்ட இயந்திரத்தை போலீசார் கைப்பற்றி யாழ். போலிஸ் நிலையத்தில் காவலில் வைத்துள்ளனர்.

## தீயணைக்கும் படை ஆரம்ப நிதி ரூ.50 ஆயிரம் சேர்ந்தது

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணத்தில் தீயணைக்கும் படை ஆரம்பிப்பதற்கு, நேற்றுக் கூட்டப்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள் கூட்டத்தில் 50 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை மண்டபத்தில் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நிதி உதவி வழங்கும் ஆரம்பக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

இக்கூட்டத்தில் யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ். வர்த்தகர்கள், முன்னாள் உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் [illegible] கலந்துகொண்டனர்.

அனைத்திலங்கை அகில இ. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. மௌன மதியாபரணம், ஆரம்ப நிதியாக தமது கழகம் சார்பில் 10,005 ரூபாவை ஆணையாளரிடம் அன்பளிப்பாக வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து திரு. எஸ். சுப்பிரமணியம் ரூ. 1001 மனோகரா செல்வர் ரூ. 5,001, பரமசிவம் ரூ. 1,100, [illegible] ரூ 10 ஆயிரம், ரி ஜெயபாலசிங்கம் ரூ. 1000, எஸ். [illegible] ரூ. 5000, வி. [illegible] ரூ. 500, ரதி [illegible] ரூ. 1,000, வி. [illegible] ரூ. 1,001, யாழ். [illegible] ரூ. 5,000, [illegible] (முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்) ரூ 1,500, திரு ஜே ஏ. செல்வநாயகம் (யாழ். மாநகரசபை மு. உ) ரூ 1,000, சட்டத்தரணி ஜனாப் ஏ. எம். இமாம் (யாழ். மாநகரசபை மு. உ) ரூ. 1001, யாழ். பஸ் நிலைய வைரவர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. அ. துரைசிங்கம் [illegible] 5,000.

தீயணைக்கும் படை நிறுவ 11 லட்சம் ரூபா தேவைப்படும். இப்பணியை நிறைவேற்ற தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் ஆணையாளர் திரு. சிவஞானம் தமது தலைமையுரையில் கேட்டுக்கொண்டார்.

திரு. பௌன. மதியாபரணம் நன்றியுரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அச்சுவேலி சன்னதிவீதி, 24 ஒழுங்கையில் 12 பரப்புக்காணி (முழுக்கலும் அக்கறை பிடித்தும்) உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கே. பி. ஆனந்தன், "இஜனரல் ஸ்ரோஸ் சென்ரர்", இல. 2, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். 2122

பலாலி வீதிக்கு அண்மையிலுள்ள ஊரெழு சரந்தன் வீதியில் தோட்டக்காணி 75 பரப்பு இரண்டு கிணறுகளுடன் உண்டு. 25 பரப்புக்களாக விற்கப்படும். விபரம்: அ. இ. பரமநாதன், சேர்க்கிழக்கு, கோண்டாவில். 2147

அரியாலை நெடுங்குளம் வீதிக்கு அருகாமையில் 8 பரப்புக்காணி முழுமையாக அல்லது பகுதியாக உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T சோமசேகரம் 23 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22692 (2157

கொக்குவில் K. K. S. வீதி 3-ம் கட்டையில் 3 1/4 பரப்பு காணி கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு. திருமதி இலகுநாதன், கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். 2029

நல்ல தண்ணீர் கிணற்று வசதியுடன் கைதடியில் 2½ பரப்பில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: செ. இராஜேந்திரன் 134, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2119

புதிய 36 ஸ்ரீ 3652 135 ரகம், பிலிப்ஸ் ரேப் ரேடியோ நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மா. சண்முகராசா, கவிபுரம் மேற்கு, கவிபுரம். 2117

மானிப்பாய் கட்டுடையில் 28 பரப்புக் காணி விற்பனைக்குண்டு வீடு, தொழிற்சாலைக்கு உகந்தது. பரப்பு 7.000/- ரூபா. தொடர்பு: வயிரவநாதன் கட்டுடை, மானிப்பாய். 2183

C. V. 6000 தொடர் இலக்கமுடைய தேர்ஸ் ரேடர் இரும்பு பெட்டி உடைய மோட்டார் விற்பனைக்குண்டு நேரில் பார்வையிடலாம், சு. கந்தசாமி, பழைமலண்டு, காரைநகர். 2188

E L F 250 வான் 26 தொடர்பு இலக்க புதிய பொடி விற்பனைக்கு பழைய பொடியும் உண்டு. தொடர்பு: செ தர்மராசா, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு 2187

ஷேவர் ஸ்ரார் புரோ Shaver Starbro புரொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். ச.எஸ் ஆர் ஜோதி பாமிஸ், பிரம்படி, கொக்குவில். 2179

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுண் அண்மையில் முட்டையிட ஆரம்பித்துள்ள கோழிகள், இரண்டு மாத முட்டைவார பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு சன் சந்தனராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2178

தங்கநிலையிலுள்ள 87 Sri தொடரிலுள்ள C B 125 TWIN, HONDA [ALLOY WHEEL] மோட்டார் துவிச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. நடராசா, 62/1 இவள்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 2169

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியிலிருந்து 5 நிமிஷ நடை தூரத்தில் 11 1/2 பரப்புக் குடியிருப்புக் காணி நல்ல மாதுளைப்பான பலன்தரும் மரத்துடன் விற்பனைக்கு உள்ளது. நல்ல தண்ணீர்க் கிணறும், மின்சாரம் பெற வசதியும், Jaffna College, Vaddu Hindu College 1/2 மைல் தூரத்திலும் உள்ளன. தொடர்பு: S. கிருஷ்ணானந்த, "திருச்செல்வ வாசா", குறிச்சி, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 2161

அரைப் பரப்பு வெறும் காணியும் வீட்டுடன் கூடிய எட்டும் பரப்பு காணியும் சங்கரத்தை ரோட், மானிப்பாயில் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும் "கடைவாசல் வளவு" லோட்டன் ரோட், மானிப்பாய். 2168

அம்மி, குட்டுக்கல், உரல், அம்மிக்கல் அழுத்தமான கருங்கல்லில் கைதேர்ந்த தொழில்நுட்ப கலைஞரால் கடைக்கப்பட்டது! தயாரித்து விற்பவர்கள் சூரியா ஸ்டோர்ஸ் வவுனியா. சாவகச்சேரியில் கிடைக்குமிடம்: கந்தையா அப்துல்காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 2177

கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில் வீடு கட்டக் கூடிய 1 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T. குணரத்னம், 107 கம்பன் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 2155

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன் பருத்தித்துறை வீதியில் இருக்கும் 555/20 இலக்க மூன்று பரப்பு குடியிருக்கும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பரமசிவம், No. 186 கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 2149

ஒட்டுசுட்டான் சந்திக்கு அருகாமையில் முத்தையன்கட்டு குழாய்நீருடன் மூன்று ஏக்கர் காணி அதிக தென்னை, மா, பலாவும் 7 அறைகள் கொண்ட வீடு நீர்மைதானம் கட்டியநிலையில் உண்டு. 28 ஸ்ரீ 358 டிசல் ஒஸ்டின் J 2 மொறிஸ்குட்ஸ் வான் இஞ்சின் பழுதுபார்த்து குறைந்தவிலைக்கு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: இ. கோணேஸ் மாணிக்கபிள்ளையார் கோவிலடி முன்பாக ஒட்டுசுட்டான். 2124

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையிலும்பாடசாலைக்கு கிழக்குப் புறமாகவும் ஏழு பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரதான வீதியிலிருந்து ஐம்பது யார் தூரத்தில் உள்ளது. காணி குறைந்த பரப்பளவில் பிரித்துக் கொடுக்கப்படும். பராராஜசேகரன் செகராஜசேகரம், விஜயமஹால், நவாலி வடக்கு, மானிப்பாய் (மானிப்பாய் சந்தையிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள அருக்கை கோவிலடிக்கு சமீபத்தில்). 2090

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு கந்தர்மடம், பலாலி வீதியில் வாடகைக்கு உண்டு. தொடர்பு: புதிய பலாலி வீதி. 2126

## தேவை

தற்போது இயங்கிவரும் எமது நிறுவன Garments க்கு தொழிற்பட விருப்பமுள்ள திறமையும் அனுபவமுமுடைய Tailars தேவை. 12ம் திகதிக்கு முன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சகி ரெடிமேட் மேகலா, வல்வெட்டித்துறை. 2172

இரு பெண் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. விபரங்களுக்கு: 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2176

Shopping Bags தயாரிப்பில் அனுபவம் நிறைந்த ஒருவரும் Plastic Empossing வேலையில் அனுபவம் நிறைந்த ஒருவரும் உடன் தேவை, நேரில் வரவும். ராஜசன்ஸ் பிரயாணப்பொருட்கள் தொழிலகம் சுதுமலை வடக்கு மானிப்பாய். 2165

தோட்டக்காணி அல்லது திருத்தி எடுக்கக்கூடிய பெரிய நிலப்பரப்பு யாழ். நகருக்கு அருகாமையில் அல்லது சுமார் 7 மைலுக்கு உட்பட்டதாக உடனே தேவை. பரப்பளவு, இடம், எதிர்பார்க்கும் விலை குறிப்பிட்டு எழுதவும். கா. பனா. புளி முதலிய பெரும் விருட்சங்கள் செழித்து வளரக் கூடிய காணியும் தேவைப்படுகிறது. எவ்விதகாணியாயினும் 25 பரப்புக்கு மேலாகும் வெளிநாடுகளும் விண்ணப்பிக்கவும். த. பெ. 393 கொழும்பு. 1892

E L F 250 Double Whee Full Body உள்ள லொறி குத்தகைக்குத் தேவை. தொடர்பு: நிர்வாகி, Brown and Co, யாழ்ப்பாணம். 2188

யாழ்ப்பாண இந்துவேளாள குலத்தைச் சேர்ந்த 42 வயதுடைய இலிகிதராகவிருந்து வயது முதிர்ந்த மணமகன். கூட்டுக்குடும்பத்தில் இல்லாத மகளிரானுக்கு இரண்டாம் தாரமாக தமிழ் பண்பாட்டில் பற்றுள்ள தெய்வபக்தியுள்ள மணமகள் தேவை சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. சாதகத்துடனும் விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். மற்றவை நேரில். விளம்பர இல: 2145, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 2145

## காணவில்லை

காரைநகர், கொம்படைப் புலம் களபூமி என்னும் இடத்தைச் சேர்ந்த 'தவா' என அழைக்கப்படும் து. தவானந்தன் என்பவரை 02-05-84 6-00 மணிமுதல் காரைநகரில் இருந்து காணவில்லை. இவரது வயது 12 உயரம் 4 அடி இருக்கும் பொதுநிறம். தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டிருக்கும். இவர் கடைசியாக நீல நிற அரைக்காற்சட்டையும், அரைக்கை வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது S. துரைச்சாமி ஆசிரியர், களாநிதி ஆ. திவாகரராசா, மத்தியமகாவித்தியாலயம், காரைநகர் என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அறிவித்தரவும். 2174

## சேவை

சகல பாடசாலைகளுக்கும் சொகுசான வான் சேவை பாதுகாப்பாகவும் பொறுப்பான முறையிலும் அளித்து வருகிறோம். தொடர்பு S பத்மநாதன் 40, செட்டித்தெரு லேன், நல்லூர். 2164

## வாடகைக்கு

Betamax வீடியோ புதிய படப்பிரதிகள்பெற தொடர்பு கொள்ளவும் த துரைசிங்கம், கனகரத்தினம் மகா வித்தியாலயம் முன்பாக, 376 B காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம். 2181

# இதுவன்றோ தானம்

இக்காகோவில் சார் லியத் தில் கடந்த 19 வயதுப் பெண் மூளையில் அடிபட்டு இறக்கும் தறுவாயில் இருந்தாள், இறந்தபின் எவருக்கும் உதவாது மண்ணுடன் மண்ணாகக் கலக்கும் இந்த உடலிலுள்ள உறுப்புக்களை அவை தேவைப்படும் நோயாளிகளுக்கு உடனே பொருத்தினால், பலர் அந்த இறந்த பெண்ணின் உறுப்புக்களுடன் நீண்டகாலம் உயிர்வாழலாம் என்று டாக்டர்கள் பெற்றோர்களிடம் ஆலோசனைகள் சொன்னார்கள்.

பெண் இறக்கும் தறுவாயில் இக்காரியமான ஒரு வேண்டுகோளை என்று மதருமகள், சிறிழாமல் வேகிறார்கள்; அப்பெண்ணின் பெற்றோர் தனது பெண்ணினால் 16 பேர்கள் உயிர்வாழ முடிந்தால் அதுவே தமக்கு மகளுக்குத் தாங்கள் செய்யும் இறந்த இறுதிச்சடங்காக இருக்குமென்று எண்ணினார்கள். டாக்டர்களின் திட்டத்திற்கு முழுமனதுடன் அனுமதியளித்தனர்.

அதன் விளைவாக ஒருவருக்குக் கண்பார்வை, மற்றொருவருக்குக் குடல், மூன்றாமவருக்கு இருதயம் என்ற தேவைக்கேற்றபடி அப்பெண்ணின் பல உறுப்புக்களும் பதினாறுநோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டு அனைவரும் குணமடைந்துவிட்டனர்.

அந்தப் பெண்ணின் இருபதாவது பிறந்த நாளன்று அவளது படத்திற்கு மாலைபோட்டுத் தங்களது நன்றியுடன் செலுத்திய தோடு, அந்தப் பெண்ணின் பெற்றோர்களை ஒவ்வொருவரும் வணங்கி ஆசிபெற்றனர். தனது ஒரே செல்வத்தை இழந்து, பதினாறு செல்வங்களை ஒருங்கே அடைந்து ஒவ்வொருவரிடத்திலும் தனது பெண்ணின் மறுபிறப்பைப் பார்த்து மகிழ்ச்சியில் ஆனந்தக்கண்ணீர்விட்டனராம் அந்தப் பெற்றோர்கள்.

## சேவை

பட்டத்திலே தெளிவுச் சிறப்பு, ஒளிவிலே தரம் Vgp, Pyramids, Delux, Kavico, Esquire Thomsan வெளியீடுகள் முதற்தரமான புதிய வர்ண வீடியோ படங்களை வழங்குகிறோம் பார்த்தவர்கள் திருப்தியடைகிறார்கள் டேவிட் கிளோரி, 38, கேக்படி வீதி யாழ்ப்பாணம். 2160

## விற்பனைக்கு: பின்வரும் பொருட்கள் விற்பனைக்குண்டு.

தஷனல் குளிர்சாதனப்பெட்டி 12 ச. அடி.
இலக்றோலக்ஸ் 6 அடுப்பு காஸ்
இலெக்ரிக் குக்கர் [அவனுடன்]
இலக்ரோனிக் சுவர்க்கடிகாரம்
ஸ்ரெயின்லெஸ் ஸ்ரீல் சோஸ்பான்ஸ்
தஷனல் றைஸ் குக்கர்
ரொற்றிங் ரேயின் வேலுக்கள்
வேறு புதிய பொருட்களும்
தொடர்பு:-
நல்லூர் வீடியோ சென்ரர்,
19, முருகேசர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2163

# VACANCIES

கீழ்க்காணும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

1. Welders ஒட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்


Promoters Engineering Company Ltd.

844, Point Pedro Road,
Nallur, Jaffna.

# 1-வது வருட நினைவஞ்சலி

திரு. இராசரத்தினம் தெய்வேந்திரராசா
[C. T. B கணக்காய்வாளர்]

மலர்வு: 15-02-1952 உதிர்வு: 18-04-1983



அன்பின் திருவுருவாய், பண்பின் இரமாய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த உத்தமரே உமைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் எமது உள்ளத்தை றகளிலெல்லாம் வாழ்கிறாய! என் உள்ளங்கே உம்பிரிவின் துன்பச் சுமையாலே வாடுகிறோம். என் செய்வோம் நற்சுபநேரமெல்லாம் நம்மில் வளர்ந்து நீர் இல்லாதபோது இதுவா எமது விதி. இன்று முதலாவது நினைவஞ்சலி நாளன்று உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மாமன், மைத்துனி
காரைநகர், நீர்வேலி 2158

வாரமலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

## வித்திக்கு மணிவிழா

பேராசிரியர் வித்தியானந்தனின் மணி விழாவை "கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்" எதிர்வரும் 12ம் திகதி நடத்துவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

கல்வி நிரம்பிய குடும்பத்தைச் சேர்ந்த பேராசிரியர் வித்தியானந்தன் பாடசாலைக் காலத்திலே அக்காலச் சூழ்நிலை காரணமாகத் தமிழ் அல்லாத பாடங்களாலேயே கவரப்பட்டார். எனினும், பல்கலைக்கழகத்தில் முதல் வருட மாணவனாயிருந்த காலத்திலே இவர் மறைந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் செல்வாக்கினுக்குட்பட்டார். இப்போதிருக்கும் பேராசிரியர் வித்தியானந்தனைத் தமிழாய்வுப் பக்கம் திருப்பியவராவர். அது தமிழாதுகாவலராக 1960ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். இம் மாபெரும் கட்டத்திலே வாழ்ந்த பல்வேறு மாணவர்களின் நலனையும் மனப்ப நிர்வாகத்தினையும் அவர் கவனித்து வந்தார்.

### இரு துறைச் சேவை

பேராசிரியர் வித்தியானந்தனின் அறிவுத்திறன் பற்றிக் கூறுவதற்கு எனக்கு ஏற்ற தகைமைகள் இல்லை. எனினும் பேராசிரியர் வித்தியானந்தன் வாழ்வின் இரு அம்சங்கள்பற்றி நான் முதன்முறை அறிவுடனே பேசமுடியும். ஒன்று, பேராதனைத் தமிழ் மாணவர்களுடைய பண்பாட்டு வாழ்வில் அவருக்கிருந்த ஈடுபாடு. மற்றையது, தமிழ் மக்களின் நாடகத்திற்கும் நாடக மரபுகளுக்கும் அவர் ஆற்றிய பணியாகும். தமிழ்ச் சமூகத்தின் பெருந்தலைவராக இந்த காலத்தில் பேராதனையிலே ஒரு இந்துக் அப்புறப்படுத்திவிட்டார். அப்பொழுது என்னை ஏன் உடன் கூட்டிச்செல்லவில்லை என இவரிடம் கேட்டேன். மிகச் சுருக்கமான மறுமொழி கூறினார். "இருவருள் ஒருவராவது உயிருடன் இருக்கவேண்டும். எனக்கு ஏதாவது நேர்ந்தாலும் நீர் உயிருடன் இருக்கவேண்டுமென எண்ணினேன். இதுதான் சமயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பினைத் தன் தலையிலே கொண்ட இப்பேராசிரியருடைய பெருந்தன்மையாகும்.

### நாட்டுக்கூத்துத் துறையில்...

இவருடைய மற்றைய முக்கிய பணி மட்டக்களப்பு, மன்னார் போன்ற இடங்களிலே நாட்டுக்கூத்து நாட்டார்பாடல் ஆகியவற்றினைப் பேணிப்பாதுகாத்ததாகும். இப்பிரதேச மாணவர்களுடைய ஒத்தாசை

# இளம் அறிஞர்கூட்டத்திற்கு

# தேக்கநிலை நீக்கவேண்டும்

மனித வாழ்வில் உலகியல் உச்சநிலை வகிக்கிறது. எங்கள்நாடு இதனை நிரூபிக்கிறது.

ஆன்மிகம் பற்றிய செய்திகள் சஞ்சிகைப் பகுதி போலவோ தபோல் அரசியல் கட்டங்களில் வெறும் புருடாவாகக் காணப்படுகின்றன.

வாழ்விற்கு அடிப்படை ஆன்மிகம்; வாழ்வை உயர்த்துவது ஆன்மிகம். அது உலகியலுடன் தோளோடுதோள் இணைந்து வளர்வதே மனித வளர்ச்சியைக்காட்டும்.

இன்றுநாட்டில் நாம் காணும் தேக்கநிலை புலித்து நாறுகிறது. குற்றங்களும் கொடுமைகளும் சமூகத்தின் இழிந்த உலகியல் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

ராணுவத்தால் மக்களை அடிபணியவைத்தல் இந்த இழிந்த நிலையின் இயற்கையான சுபாவம்.

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பது முக்காலத்துக்கும் பொருத்தமான உண்மை. அரசியல் பிழைத்த கட்டத்தின் புலுவத்தில் நாம் வாழ்கின்றோம்.

ராணுவம் வலிமையற்ற போது கலோரங்கள் மக்களைச்சலிக்கவைக்கின்றன. உயிரோட்டமற்ற வெறும் உரைகள். இன்றைய சலோகம்; வருத்தம், வெட்கம், வேதனை.

இங்கு நடந்தேறிய கொடுமைகள் ஊற்றித்தெரிவிக்கப்படும் உணர்வுகள் இவை.

இருதய அந்தரங்கத்திலிருந்து எழுகின்றனவா இவை?

உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுவோர் உறவின் அவர்த்தங்கள் அனந்தம்!

# புதுவழிஅமைக்கஉதவியவர்

# ‘வித்தி’ தம்பதிகள்

றினத்திற்கே பெருந்தன்மையாயிற்று. இவர் தமிழறிஞராக அரும்பியருங் காலத்தே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் இவரைப் பல்வேறு வழிகளிலே ஊக்கமளித்தார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் சுவாமி விபுலானந்தரும் இவ்விள அறிஞரின் திறனிலே மிக ஆழ்ந்த நம்பிக்கைகொண்டிருந்தனர். அந்த நம்பிக்கை வீண்போகாதவாறு பல நூறு அறிஞர்களை இந்நாட்டிலே இவர் உருவாக்கியுள்ளார். தற்போது இந்நாட்டிலே இப்பேராசானுக்கு ஏதோ வகையிலே கடமைப்படாத ஒரு தமிழ் அறிஞனும் இல்லையெனவே கூறலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகமானது கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாறிய காலகட்டத்திலேயே பேராசிரியர் வித்தியானந்தனுடன் நான் நெருங்கிய தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இவர் ஜயதிலக்க மண்டபத்தில் முதல் துணைப் பாதுகாவலராகவும் நான் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபத்தின் முதல் துணைப் பாதுகாவலராகவும் கடமையாற்றினோம். ஏனைய துணைப் பாதுகாவலர்களும் நாங்களும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாறு படைக்க எம் இளமைத் தோள்களைக் கொடுத்தோம். பேராசிரியர் வித்தியானந்தன் பேராதனையில் மிகப் பெரிய மண்டபமான 565 மாணவர்களைக் கொண்ட விஜயவர்த்தன மண்டபத்தின் பேராசிரியர் வித்தியானந்தன் கோயில் இவருடைய மேற்பார்வையிலே கட்டி முடிக்கப்பட்டது. நாளுக்கு நாள் நடைபெறும் கட்டட வேலையினை மேற்பார்வை செய்ததாலும், இவருடைய சொந்தத்தொடர்பினாலே பல தனவந்தர்களின் நிறைவான நன்கொடை கிடைத்ததாலுமே இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டது. 1977 ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் இக்கோயில் உடைக்கப்பட்டது. இச்செய்தி அப்போதைய நீதியமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்னவுக்கு எட்டியபோது, இக்கோயிலுக்குப் பாதுகாப்பளிக்க ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை என்னிடம் அனுப்பிவைத்தார். ஒரு பொலிஸ் உத்தியோகத்தருடன் கோயிலுக்குப் பாதுகாப்பளிக்கும் இக்கட்டான கட்டத்தில் நானிருந்தேன். இவ்வேளை, பேராசிரியர் வித்தியானந்தனுடன் தொடர்பு கொண்டேன். உடனடியாக என்னுடைய வீட்டுக்கு வந்த இவர், கோயிலிலிருந்த விலை மதிப்புள்ள பொருட்களையும் விக்கிரகங்களையும் பாதுகாப்பான இடங்களிலே சேர்க்கும் முயற்சியிலே உடனடியாக இறங்கினார். அச்செயலும் பற்றும் நிறைந்த அவ்வேளையில் அவருடன் கூடச்செல்வதற்கு நான் விரும்பினேன். ஆனால், என்னைத் தன்னுடன் கூட்டிச் செல்வதற்கு அவர் மறுத்துவிட்டார். நான் இரண்டு சிறிய மனமுடைந்தேன். இதற்கிடையில் அதிகாலை ஒரு மணியளவில் கோயிலிலுள்ள பொருட்களைப்



இவருக்குக் கிடைத்த காரணத்தாலே மரபுக்கலைகள் இவை பேணிப்பாதுகாக்க முடிந்தது. மட்டக்களப்பு, மன்னார் நாட்டார் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு இவர் தயாரித்த நாடகங்கள் வடக்கிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தின. வடக்கில், தாழ்ந்த சமூகத்தின

பேராசிரியர்
எஸ். இராசரத்தினம்
[பணிப்பாளர், மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி]

ராலேயே நாடகமரபுகள் பாதுகாக்கப்பட்டுவந்தன. பேராசிரியர் வித்தியானந்தன் இச் சமூகத்தினரிடம் சென்று அவர்களிடையேயிருந்த பிரபலம் வாய்ந்த கலைஞர்களைத் தன் வீட்டுக்கு அழைத்து, அவர்கள் பொருத்தமான நாடகங்களை தயாரிக்கப் பெரும்பாலும் வழங்கினார். புதிய கலைஞர்களைத் தேடிச் சென்ற இக்கலைஞருக்கு சாதி, சமயம் என்ற வேறுபாடு தெரிவதில்லை. மரபுவழிவந்த குடும்பத்திலே பிறந்திருந்தாலும் இவருடைய நல்லெண்ணமே என்றுமே தெரி(ந்த)து. அவருடைய மனைவியுடைய வீட்டிலே வரவேற்கப் படுவர்.

### துணைவி கமலா

இவருடைய மனைவியாக இருந்து மனைவியாக மறைந்த கமலாதேவி இவருக்கு மிகப் பெரியபலமாயிருந்தார். இளம் அறிஞர் கூட்டத்துக்குப் புது வழி அமைப்பதிலே இத்தம்பதிகள் உதவினர்.

வித்தி அவர்களை எனக்கு நாற்பது வருடங்களாகத் தெரியும். அந்த நாற்பது வருடங்களையும் இவருடைய நண்பராக அல்லாமல் இவருடைய மாணவராகத் திரும்ப வாழவேண்டுமென ஆசைப்படுகிறேன். இவருடைய ஆசிரிய நிலையினை நான் உணரும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. சமூக விஞ்ஞானி என்ற முறையிலே, பேராசிரியர் இன்று நினைப்பதுபோல தமிழ்ச் சமூகம் நாளை நினைக்கப்போகின்றது என்பதை நான் உணர்வேன். அவருடைய எழுத்தாக்கங்களை மேலுமுடன் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என் பதைபதைப்பு மிகவும் வருந்துகிறேன். இவருடைய மாணவனாயிருக்கும் நல்ல வாய்ப்புக் கிடைத்திருந்தால் நான் இன்னுஞ் சிறந்த சமூக விஞ்ஞானியாக ஆகியிருக்கலாம். இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வாராக.

சுவாமி சிவானந்தர் விளக்குகிறர்:

## மேலான சமயம் எது?

பிறருக்கு நன்மை செய்வதே யாவற்றிலும் மேலான சமயம். ஒவ்வொரு வாரமும் சில மணிநேரம் தாம் என்னும் அகம்பாவமின்றிப் பலனை எதிர்பாராமல் தன்னலமற்ற சேவை ஏதேனும் செய்யுங்கள். உங்கள் இவ்வுலகக் கடமைகளையும் இதே மனப்பான்மையுடன் செய்துவாருங்கள். வேலையே வழிபாடாகும். அதை இறைவனுக்கு அர்ப்பணியுங்கள்.

ஒவ்வொரு மாதமும் உங்கள் வருமானத்தில் இரண்டு சதவீதம் முதல் 10 சதவீதம்வரை தருமம் செய்யுங்கள். உங்களிடமுள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உலகமனைத்தும் உங்கள் குடும்பமாகக் கருதுங்கள். சுயநலத்தை அகற்றுங்கள்.

பணிவுடனிருங்கள், எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். சகிப்பு, செருக்கு, வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள். இறைவனிடத்தும் சமய நூல்களிலும் குருவிடத்தும் நம்பிக்கை வையுங்கள். இறைவனிடம் பூரண சரணாகதி அடையுங்கள். "யாவும் தங்களிச்சைப்படி நடக்கும்; "நான் எதுவும் விரும்பவில்லை" என்று பிரார்த்தியுங்கள். எது நிகழ்ந்தாலும் இறைவனது இச்சையென்றெண்ணி சமத்துவ புத்தியுடன் நடந்து கொள்ளுங்கள்.

தொகுப்பு: க. கனகராசா - ச. நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் உறவுகளும் பிரிவுகளும் - 10

எஸ். எம். கோபாலரத்தினம்

1975ஆம் ஆண்டில் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு தெற்குத் தொகுதி உறுப்பினர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்து மீண்டும் இடைத் தேர்தலில் போட்டியிட முன்வந்தார்.

1970ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த அதிகாரம் ஐந்து வருடங்களுக்கு மட்டும்தான் என்று திரு. ஜே. ஆர். கூறினார்.

ஐந்து வருடங்கள் முடிந்ததும் ஆளும் கட்சியும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தி மக்களிடம் மீண்டும் அதிகாரம்பெறவேண்டுமென்று அவர் சொன்னார்.

அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கி மேலும் இரண்டு வருடங்களுக்குப் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடித்ததை திரு. ஜே. ஆர். ஆட்சேபித்தார்.

இதை முன்வைத்துத் தமது எம். பி. பதவியை ராஜினாமாச்செய்து மீண்டும் இடைத்தேர்தலில் போட்டியிட்ட ஜே. ஆர். வெற்றிபெற்று மீண்டும் எம். பி. ஆனார்.

இதற்கிடையில் ஜே. ஆர். ஐக்கியதேசியக் கட்சிக்குள் களையெடுப்பு நடத்தினார்.

# பாராளுமன்ற ஆயுள் நீடிப்பு

# ஜே. ஆர். 72ல் எதிர்த்தார்

## பாராளுமன்றத்தில் தமிழ்ஈழப் பிரேரணை

1972ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பை ஈழத்து தமிழ் மக்கள் ஏற்கவில்லையென்பதை எடுத்துக்காட்டும் பொருட்டு 1972ஆம் ஆண்டு தமது காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. பதவியை ராஜினாமாச் செய்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1975ஆம் ஆண்டுவரை காலம் கடத்தப்பட்டபின் நடந்த இடைத்தேர்தலில் வெற்றியீட்டும் பாராளுமன்றத்துக்கு மீண்டும் வந்ததும் தமது கட்சியின் இதர உறுப்பினர்களுடன் சேர்ந்து ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

"இலங்கையின் இருவேறு நாட்டினங்களான சிங்களரும் தமிழரும் சுதந்திரமான உரிமையுடையவர்களாகலின்- அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும் தமிழ் நாட்டினமும் இன்று வரை பிணைக்கப்பட்டுள்ளமையால், சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும், சிங்கள நாட்டினத்தினை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்த்த அதன் பலனாக இப்போதுள்ள அரசியல் அமைப்பு ஒரு தலைப்பட்சமாகத் திணிக்கப்பட்டுத் தமிழ் நாட்டினம் அடிமைப்படும் நாட்டினமாக்கப்பட்டுள்ளமையால்

காங்கேசன்துறை இடைத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற இறைமையுடைய மதச் சார்பற்ற சமதர்ம நாடான தமிழ்ஈழத்தை அமைப்பதற்குரிய ஆணையாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது"

இதுவே அத்தீர்மானமாகும்.

திருவாளர்கள் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் (காங்கேசன்துறை), விஸ்வநாதர் தர்மலிங்கம் (உடுவில்), அருணாசலம் தங்கத்துரை (மூதூர்), சேவியர் செல்லத்தம்பு (வன்னி), பாலசுப்பிரமணியம் நேமிநாதன் (திருகோணமலை), சிவசுப்பிரமணியம் கதிரவேலுப்பிள்ளை (கோப்பாய்), வல்விபுரம் நல்லதம்பி நவரத்தினம் (சாவகச்சேரி), கந்தப்பா ஜெயக்கொடி (கடுப்பிட்டி), கதிரிப்பிள்ளை துரைரத்தினம் (பருத்தித்துறை), கார்த்திகேசன் பொன்னம்பலம் இரத்தினம் (ஊர்காவற்றுறை), செல்லையா இராஜதுரை (மட்டக்களப்பு), வீரசிங்கம் ஆனந்தசங்கரி (கிளிநொச்சி) ஆகியோர் இத்தீர்மானத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

## கூட்டணி எம். பி.க்கள் நால்வர்

## 10 நாட்கள் காவலிலிருந்தனர்

## 3 நீதிபதிகள் முன் இவர்கள் விசாரிக்கப்பட்டனர்

இத்தீர்மானம் 1977 பெப்ரவரி நான்காம் நாளுக்குரிய தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் இடம் பெற்றது. (ஈழத் தமிழர் இறைமை மு. திருச்செல்வம் நூல்)

### கூட்டணி உதயம்

தமிழ்த் தலைவர்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கி

(15ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த்தலைவர்களின் அந்திய காலத்து ஞானோதயம் தொடர வேண்டும்!

சென்ற ஞாயிறு "ஈழநாடு" வாரமலரில் இலங்கை அரசியலில் உறவுகளும் பிரிவுகளும் பற்றிய (அத்தியாயம்-9) வெளியான கட்டுரையில் தமிழ் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு ஒற்றுமைப்பட்டு 'தமிழர் கூட்டணி' என்ற அமைப்பை உருவாக்கியதைப்பற்றிய விமர்சனம், இன்றைய அவசியமாகிய தாக்கத்தில் ஓர் ஒளடதமாக அமைந்ததன்றோ! தமிழினத்தின் பெயரால் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

### ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சொல்லப்பட்ட கைங்கரியத்தில் சம்பந்தப்பட்ட மதிப்புக்குரிய தலைவர்கள் கொள்கைக் கட்டுப்பாட்டுகளில் எங்கனம் நயக்கிரம முரண்பாட்டுடன் ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம், 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாது' என்ற ரீதியில் இயங்கி தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாகட்டும்" என்ற அனர்த்தமான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தவையில் "கழுதைதேய்ந்து கட்டெறும்பான கதைக்கொப்ப" தமிழினமே அழிந்தொழிந்த நிலையை அணுகிக்கொண்டிருந்தது.

எங்ஙனமாயினும், தமிழினத்தின் தாய அடிப்படை முழுமையாகத் தேய்வுறுமுன்னரே, சம்பந்தப்பட்ட தலைவர்களின் அந்திய காலத்திலேனும் ஓரளவு ஞானோதயம் ஏற்பட்டு, தலைவர்கள் மாத்திரமல்லாது பல்வேறு கூறுகளாய்ப் பிரிந்திருந்த மக்களுமே ஒன்றுபட்டதைத் தமிழினத்தின் தவப்பேறென்றே கொள்ளவேண்டும்.

### பழைய கிழவி கதவைத் திறவடி

ஆளும் முதிர்ந்த தலைவர்கள் இவர் காலப்போக்கில் துரதிர்ஷ்டவசமாக மறைந்து போக, அவர்களுடைய வாரிசுகள் சொல்லப்பட்ட ஒற்றுமையைப் பேணிக் காக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டமை வருந்தத்திற்குரிய விடயமாகும்.

ச. ஞானமூர்த்தி எழுதுகிறார்

(14ம் பக்கம் பார்க்க)


கசட் உலகின் இன்றைய 'கதாநாயகன்'

maxell®

★ எலக்ரோனிக் கைக்கடிகாரங்கள், ★ கமராக்கள், ★ கல்குலேற்றர்கள்,
★ பெட்டரிகளிற்கான பற்றி வகைகளிற்கு—'மக்சல்'

சிங்கப்பூர், ஜப்பான், ஹொங்கொங் இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களுக்கும்,
சிலுவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1/2" மோட்டார்களை சில்லறையாக மொத்தமாகப் பெற்றுக்கொள்ள,

இன்றே விஜயம் செய்யுங்கள்

MAXS DISTRIBUTORS

20 JUBILEE BAZAAR, JAFFNA. (ராணி இனிமாவுக்கு அருகில்)

இன்றுமுதல் மேலதிக விபரங்கட்கு:
மக்ஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
இல 14 யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய். [மருதடிப் பிள்ளையார் அருகில்]

எமது வாடிக்கையாளர்க்கு: எமது வான் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.



நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்

நிலையான வைப்பிற்கு யாழ்.நகரில் அதியுயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்.

SHABRA

துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கில ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரா"

61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமது சிறுகதை

# கடமைக்கு இரையான கற்பனைகள்...

### செல்வி ஆதிலட்சுமி இராசையா

பொழுது இன்னமும் நன்றாகப் புலரவில்லை. வெள்ளிக்கம்பிகளாய் இப்போது தான் வெளிச்சம் பரவத் தொடங்கியிருக்கிறது. கையிலிருந்த றவலிங் பாக்கின் கனம் தாங்காது அதை மறு கைக்கு மாற்றிக் கொண்டு வீட்டை நோக்கி விரைவாக நடந்து கொண்டிருக்கிறான் சீலன்...

தகரப்படலையைத் திறந்து கொண்டு அவன் உள்ளே நுழைந்தபோது, முற்றத்தில் அம்மா மார்கழிக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். இவனைக் கண்டதும் 'வா ராசா வா... இப்பவும் உன்னைத் தான் நினைச்சுக் கொண்டிருந்தனான்...' என்று வரவேற்றாள் அம்மா.

அவனுடைய கண்கள் அவசரமாக வசந்தியைத் தேடின.

'அம்மா! வசந்தி எங்கை?' என்றான் ஆவலுடன்.

'அவள் துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போட்டாள் ராசா... இப்ப வந்திடுவள்... நீ உடுப்பை மாத்திக்கொண்டு வா... நான் தேத்தண்ணி போடுறன்...' என்றபடி கை யலம்பி சீலைத்தலைப்பில் துடைத்துக் கொண்டாள் அம்மா.

'என்னம்மா... விடியவெள்ளனவே போட்டாளே...' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் சீலன்.

'ஓம் தம்பி...' இப்ப எந்நேரமும் அங்கை சரியான சனம்... அதுவும் கலியாணம் கட்டாத குமருகள்தான் அதிகம்... நான் ஒரே ஒரு நாள் போனனான். பிறகு வீட்டிலநின்று அம்மாளாச்சி என்றுநினைக்கிற தோடை சரி... அந்தச் சனத்துக்குள்ள போய் இடிபட என்னாலை ஏலாது...'

சீலன் உடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தான். அம்மா ஆவி பறக்கும் தேனீரை அவனிடம் நீட்டினாள். பனிக்குளிருக்கு அந்தச் சூடு இதமாக இருந்தது. தேனீரைக் குடித்துவிட்டு வெற்று டம்ளரை அம்மாவிடம் கொடுத்துவிட்டுச் சொன்னான் சீலன்.

'அம்மா! நான் உதிலை சந்தி வரைக்கும் போட்டுவாறன்...'

'வந்ததும் வராததுமா எங்கை போறாய்...? தலையிலையும் ஒன்றும் போடேல்லை... இப்ப உந்தப் பனி பிடிச்சால் தடிமன் வந்திடுமெல்லே...' என்றாள் அம்மா.

சீலனுக்குச் சிரிப்பு வந்தது. ''எனக்கு இருபத்தாறு வயதாகுது. நீங்கள் என்னவென்றால் பனியிலை நனையாதை... வெய்யில்லை திரியாதை என்று குழந்தைப்பிள்ளைக்குச் சொல்லுற மாதிரிச் சொல்லுறியள்...''


சிரித்தபடியே சொல்லிவிட்டு நடந்தான் அவன்.

சாரத்தை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிக் கொண்டு...... சேட்போடாத வெறும் உடம்புடன்... காலில் செருப்புமில்லாமல்... தோட்டத்து வரம்புகளில் நடந்த போது... மனதுக்கு சுகமாக இருந்தது. தனதுகொழும்பு வாழ்க்கையோடு இதை ஒப்பிட்டபோது, கொழும்புவாழ்க்கை அவனுக்கு கசத்தது.

தொடர்ந்து அவன் நடந்தான். தோட்டத்து வேலியில் பரிமளம்மாமி விறகுமுறித்துக் கொண்டிருந்தாள்.

''சீலனே! எப்படாவந்தனி... என்றாள் மாமிவியப்புடன்.

''இப்பத்தான் மாமிவந்தனான்.. தங்கச்சியின்ர கலியாண விஷயமாக மாமாவரச்சொல்லிக் கடிதம் போட்டவர்...' என்றான் சீலன்.



இதற்கிடையில்விறகுஒன்றை முறிப்பதற்கு பரிமளம் மாமி சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள்.

''விடுங்கோ மாமி நான் முறிச்சுத்தாறன்...' என்று அந்தவிறகை முறித்துப்போட்டான் அவன். அவன்முறித்துப் போட்ட விறகை கையில் எடுத்துக் கொண்டு...

'உனக்கு இப்போ கொழும்புவாழ்க்கை பிடிக்குதோ...' என்றாள்.

''உத்தியோகத்துக்கு என்று போறநாங்கள் விருப்பு வெறுப்பு பார்க்கேலுமே...'

''அதுசரி சீலன்...வசந்தியின்ர கலியாணம் முடிஞ்ச கையோடை நீயும்ஒரு நல்ல பெண்ணைப் பார்...கொம்மாவும் எத்தனைநாளைக்கு தனிய இருக்கிறது...' என்று மாமி சிரித்தாள்,

மாமியின் கூற்றைஆமோதிப்பது போலஅவன் சிரித்தான்.

பரிமளம் மாமிவிடை பெற்றுக்கொண்டு போனாள். அவள் சொன்னது அவனுள் புகுந்து...அவனது மனத்தை உலுப்பியது.

நல்லபெண் என்று மாமி சொன்னதுமே அவனையும்அறியாமல் யசினாவின் உருவம் அவனதுமனதில் தோன்றியது...

யசினா அவனது அலுவலகத்தில் டைபிஸ்டாக வேலைசெய்பவள்.

அடக்கமானஅழகு கலகலப்பாக பழகுவாள்.

அளவோடு சிரிப்பாள்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

அவள்வேலைக்கு வருவது அவளதுதகப்பனுக்கு விருப்பமில்லையாம். யசினாதான் பிடிவாதமாக நின்று வேலையில் சேர்ந்தாளாம். அவளைப் பார்க்கும் போதெல்லாம் சீலனுக்கு மனதில்ஆசை துளிர்விடும். ஆனால்...அவளது கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் சிலுவை அவனுடைய ஆசையை அவ்வப்போது தகர்த்துவிடும்.

இம்முறை அவன்ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கிறான். மதம் என்பது மனிதவாழ்க்கையில் நல்லவழியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டுவதற்காக மக்களால் இயற்றப்பட்டது தான். அதுமனிதர்களிடையை பேதங்களை உண்டாக்குவதற்காக உருவாக்கப்படவில்லை. எனவே யசினாவைத் தான் மனப்பூர்வமாக காதலிப்பதாக அம்மாவிடம் சொல்லவேண்டும். அம்மாமுதலில் ஊருக்கும்உலகத்துக்கும்பயந்து ஏங்குவாள் பிறகு எப்படியும் சம்மதித்துவிடுவாள் என்று அவனுக்குத் தெரியும். பெத்த மனம் பித்துஅல்லவா?!

[14ம் பக்கம் பார்க்க]

## ● டேவிட் டியொப் ரின்

## ஆபிரிக்கா

ஆபிரிக்கா, என் ஆபிரிக்கா,
எம் முந்தையோர் வாழ்ந்த
புல் வெளிப்பரப்பின்
வீரம் விளைத்த ஆபிரிக்கா,
தூரத்து நதிக்கரையில் என்
அம்மம்மா பாட்டிசைக்கும் ஆபிரிக்கா,

உன்னை நான் அறிந்ததில்லை
ஆனாலும் உன் இரத்தம் என்னிற்பாயும்
அழகான கறுப்பு இரத்தம்
வயலெங்கும் வளம் சேர்க்கும்.

உன்னுடைய வியர்வையிலே
ஊறிவந்த இரத்தமது
உன்னுடைய உழைப்பினிலே
உருகிவந்த இரத்தமது
உன்னுடைய அடிமைநிலை தந்தஅவ்வேலை
உன்னுடைய பிள்ளைகளும்
உள்ளடங்கும் அவலநிலை·

சொல்லு!... ஆபிரிக்கா, சொல்லு!...
இந்தக் கூனல் வளைவு உன்னதா?
துன்பச் சுமையில் ஒடியும் இம்முதுகு,
செந்நிறத் தழும்புடன் நடுங்கியவண்ணம்
உச்சிவெய்யிலிலும் கொடுஞ்சவுக்கின்முன்
'ஆமாம்சாமி' எனவளையும் முதுகு,

ஈனஸ்வரத்தில் ஒருகுரல்
ı தில் சொல்லும்;
வீறுகொண்ட என்மகனே,
வெளிறிய வெண்ணிற மலர்களின் நடுவே

இளமையாய், உறுதியாய்,
தனியனாய் ஒளிரும்,
அதுவே ஆபிரிக்கா -
உன்னுடைய ஆபிரிக்கா
பொறுமையாய், தளராது
மீண்டும் அது வளரும்
மெள்ள மெள்ள அதன்கனியும்
விறுவிறுப்பான
விடுதலைச் சுவையைத்தானடையும்.

**தமிழில்: என். சண்முகலிங்கன்**

டேவிட் டியொப் (1927 — 60): செனகல் தந்த விடுதலைக்கவிஞன்; ஆழமான பிரெஞ்சுக்கல்வி, ஆனாலும் சுயபண்பாட்டுத் தளத்தினின்றும் விலகாத வாழ்க்கை. டகாருக்கு அண்மையில் நடந்த விமான விபத்து ஒன்றில் தன் இரண்டாவது கவிதைத் தொகுப்பு நகலுடன் மரணித்த இவரின் முதற் கவிதைத் தொகுதி 1956ல் வெளியாகியது.

யாழ். இலக்கியவட்டமும் 'ஈழநாடும்' நடாத்தும்
இரசிகமணி கனகசெந்திநாதன்
நினைவுக் குறுநாவல் போட்டி

✯ முதற்பரிசு: ரூபா 500-00
✯ இரண்டாம்பரிசு: ரூபா 300-00

- அமரர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கியவட்டம் இந்த ஆண்டும் 'ஈழநாடு' பத்திரிகையின் அனுசரணையுடன் குறுநாவல் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது.
- எழுத்தாளர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம். ஆக்கங்கள் தங்களது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

முடிவு திகதி: 30-6-1984

- 'ஈழநாடு' வாரமலர் ஆசிரியருடன் மூவர் நடுவர்களாகக் கடமையாற்றுவர்

அனுப்ப வேண்டிய முகவரி:

இரசிகமணி குறுநாவல் போட்டி,
'ஈழநாடு' வாரமலர்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்புக்கும் பண்புக்கும் நல்லதோர் நாடு சூடான்



நா. மாணிக்க இடைக்காடர்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

எனது ஐ.நா நண்பன் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். தனக்கு சூடானில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினர். தனது சூடான் நண்பன் கடன் கேட்டான். மறு நாள் காசோலை கொண்டு வருகிறேன் என்று எனது நண்பன் கூறினர். மறுநாள் காசோலையுடன் கந்தோருக்கு வந்தார் அப்பொழுது எனது நண்பன் கவனித்தார். தன்னிடம் பணம் கேட்டவர் வேறுமொருவருக்கு ஒரு காசோலையை கொடுப்பதை—மூன்றுவது ஆள் போனபிறகு என்னவென்று விசாரித்தார் அதற்கு சூடான்காரர் ''எனக்கு பணம் தேவைதான் ஆனல் எனது நண்பன் தனது கஷ்டத்தை எனக்கு விளக்கினர். ஆகையால் என்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து விட்டேன். இவர் பணம் கேட்கமுந்தி என்னிடம் இருந்த பணத்துடன் நீங்கள் தருவதையும் சேர்த்து ஓர் குளிர்சாதனப் பெட்டி வாங்க உத்தேசித்தேன். இப்பொழுது இதைக் கைவிட்டு விட்டேன் உங்கள் பணம் தேவையில்லை'' என்று கூறினர். இங்கே எவ்வளவு பண்பு இருக்கிறது என்று தெரிகிறது. ஒருவருக்கு ஒரு தேவை இருந்தும் நண்பனின் தேவை தன்னுடைய தேவையிலும் பார்க்க முக்கிய மாதலால் தன் தேவையை விட்டுக் கொடுத்தார்.

## சூடானில் நேர்மை

வாழ்க்கையில் இன்னுமொரு நல்ல அம்சம் காணப்பட்டது. சூடானில் வியாபாரிகள் நிறையில் ஏமாற்றுவதில்லை. தங்கள் சமயம் கூறுவதை மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிப்பார்

## பாலைவனத்தில் பல ஆண்டுகள்

கள். ஒரு முறை ஒரு கிலோ அப்பிள்ப் பழம் வாங்கினேன். மூன்று பழமென்றல் ஒருகிலோவிற்குச் சொற்பம் குறைவாகவிருந்தது. நாலு பழம் ஒரு கிலோவிற்கு மிகவும் கூடவிருந்தது. எனக்குத் தெரிந்த அரபு மொழியில் மூன்று பழம் காணுமென்றேன். அதற்கு வியாபாரி தன் நெஞ்சைத் தொட்டு தனதுசமயத்திற்கு மாறென்று எனக்கு வேண்டாம் என்று கூறவும் நாலு பழம் கொடுத்தான். எனது இலங்கை நண்பனின் மகன் தனது சூடான் நண்பனுடன் அவன் கிராமத்திற்குச் சென்றன். இருவருமாக இறைச்சிக் கடைக்குச் சென்று சூடான் இளைஞன் இரண்டு கிலோ இறைச்சி கேட்டான். கடைக்காரன் இவர் யாரென்று கேட்க இவர் ஒரு இலங்கையர் என்று கூறவும் நாலு கிலோ இறைச்சியைக் கொடுத்து இலங்கையிலிருந்து இந்தக் கிராமத்திற்கு முதல் விஜயம் செய்தவருக்கு இரண்டு கிலோ இனும் என்றன். விசால பாலைவனத்தில் சீவிப்பதன் காரணமோ வேறு காரணமோ தெரியாது. இவர்களுக்குப் பரந்த மனப்பான்மை இருக்கிறதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது

நல்ல அம்சங்களைக் கூறுவதுடன் சில குறைபாடுகளையும் கூறத்தான் வேண்டும். இதிலே முக்கியமானது சோம்பல் விவசாயிகள் சோம்பலாய் இருக்க முடியாது. சோம்பலைக் காண்பது பட்டினங்களில் அதிலும் அரசாங்க வேலையில் உள்ளவர்கள் வேலை நேரம் காலை எட்டுமணி தொடக்கம் பின்னேரம் இரண்டு மணி வரையும். வருடத்தில் எட்டு மாதம் கடும் வெய்யில் காரணமாகவே இந்நேரத்தை மக்கள் வகுத்துக் கொண்டார்கள். காலைகடனை முடியாமல் எல்லோரும் கந்தோருக்கு வந்து விடுவார்கள். கந்தோரில் காலை கடனை முடித்துவிட்டு சாப்பிட்டு வேலைதொடங்க ஒன்பது மணியாகிவிடும். பத்து பத்தரை மணிக்குள் பார்க்க வேண்டிய உத்தியோகத்தரை பார்த்து விட வேண்டும் அதற்குப்பின் ஒரு அதிகாரியைகாண நேரிட்டால் ''புக்ரு'' என்றுகூறுவார்கள். அதாவது அரபு மொழியில் நாளைக்குஎன்று அர்த்தம். ஆறு மணிவேலையென்றலும் இரண்டு மூன்று மணிக்குமேல் அநேகம்பேர் வேலைசெய்வதில்லை. சூடானின் கால்நடையைப் பற்றிய புள்ளி விபரம் கணக்கிடுமாறு ஐ.நா. என்னைக் கேட்டுக் கொண்டது. அந்தஇலாக உதவி அதிபர் ஒருவருக்கே இதைப் பற்றி ஏதாவதுதெரியும். நான் அவரை முதன் முறைகண்டவுடன் எனக்கு தேனீர் கொடுத்து இன்னுமொருநாள் வாங்கஎன்றர். அந்தநாள் போக இராத்திரிஒருவிருந்துக்குப்போய் காலைஇரண்டுமணிக்குத்தான் முடிந்தது. தலையிடிக்கிறது இன்னமொருநாள் வரச்சொன்னர் மூன்றும்முறை சென்றபோது சில்புள்ளிவிபரத்தை கொடுத்துவிட்டு இன்னுமொரு நாள்வரச்சொன்னர். நீண்டகதையை சுருக்கமாக சொல்வதாயிருந்தால் எல்லாமே ஆறுமாதகாலத்தில் முப்பதுமுறை சென்று தேவையான புள்ளிவிபரத்தை திரட்டினேன். இப்புள்ளி விபரத்தை உரோமாபுரிக்கு அனுப்பும் பொழுது என்ன விதமாக திரட்டினேன் என்று அறிவித்தேன். ஐ.நா. எனது பொறுமையை மெச்சி உருக்கமான கடிதம் அனுப்பியிருந்தார்கள் இவ்வுதாரணம் என்னகாட்டுகிறது என்றல் அடிக்குமேல் அடிபோட்டால் அம்மியும் நகரும்மென்பதுபோல் விடாப் பிரயாசையால் முடியாத காரியத்தையும் சித்திகரமாக முடிக்கலாம்.

## சமுதாயப்பண்புகள்

சமூக வாழ்வைப்பற்றி சில குறிப்பு கூறலாம். ஒரு சூடான் வீட்டுக்குச் சென்றல் வாசலில்நின்று இருதரம்கையை தட்டவேண்டும். இதற்கு ஒரு முறையுண்டு. சுலபமாகபழகிக்கொள்ளலாம். சிறிதுநேரம் போகவீட்டுக்காரர் கதவைத் திறப்பார். இதற்குள் வீட்டுப் பெண்கள் தங்கள் பக்கம் போய்விடுவார்கள். பழைய முறைப்படி நடக்கிறவர்களென்றல் விருந்தாளிகளும் பெண்கள் பெண்கள்பக்கமும் ஆண்கள் ஆண்கள்பக்கமும் போகவேண்டும். ஆனல்தற்காலத்தில் காற்றூம் Khartoum) போன்ற பட்டினங்களில் எல்லோரும் ஒருமிக்கசேர்ந்து உரையாடுவார்கள். ஏதாவது குடிக்ககொடுக்குமுன் சூடான தேசமாகையால் பெரிய தம்ளரில் நீர் கொண்டு வருவார்கள். தண்ணீரை முழுக்க குடிக்கவேண்டும். இல்லாவிட்டால் வீட்டிலிருக்கும் பெண்பிள்ளைகள் கலியாணமாக தாமதமாகபோய்விடும் என்ற நம்பிக்கை. இடையிடையே உரையாடலில் இன்ஷாலா சொல்லுவார்கள். அதாவது கடவுளின் அருளால் என்ற அர்த்தம். உதாரணமாக நாளைக்கு உங்களைகந்தோரில் சந்திப்போமென்றல் இன்ஷாலா சொல்லுவார்கள் அதாவது கடவுளின் கிருபையால் நாளை சந்திப்போம் என்பது அர்த்தம் இனிப்புப் பதார்த்தங்கள்தான் கொடுப்பார்கள் சிலவேளைகளில் இனிப்பு சாப்பிட்டு அலுத்துப் போம் தங்கள் பழையநாகரிகத்தைப்பற்றி சொல்ல தவற மாட்டார்கள். இது எல்லாம்மூன்றும் மண்டலநாடுகளிலும் காணலாம். ஒருவிதத்தில் தங்களில் நம்பிக்கை குறைவால்தான் இப்படி பழையநாகரிகத்தைப் பற்றி சொல்வதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. விருந்தோம்பலில் சூடான் மக்கள் மிகவும்சிறந்தவர்கள். சாதாரணமாக அவர்கள் ஒரு நேரத்தில் சாப்பிடுவது எங்களுக்கு இரண்டுநேரத்திற்கு காணும். அநேகமாக உணவை நடுவில் வைத்துவிட்டு எல்லோரும் கையைப்போட்டு எடுத்து சாப்பிடுவார்கள். எங்களுக்கு கொஞ்சம் கூச்சமாகவிருக்கும். ஆனல் பட்டினங்களில் இம்முறை குறைந்து மேனட்டு முறையில் உணவு பரிமாறுகிறர்கள்.

பிறநாடுகளில் கடமையாற்றும் பொழுது தனிமை என்றல் என்னவென்று நன்கு விளங்கும். இதைஒரு கஷ்டமென்று கருதாமல் நல்லவழியில் பயன்படுத்தலாம். பல்கலைக்கழக படிப்பிற்குப்பின் சூடானில்தான் முதன் முறையாக ஆழ்ந்து யோசிக்க வாய்ப்புகிடைத்தது. தனிமையை வெல்லகடவுள் சிந்தனையிலும் சமயங்களைப்பற்றி வாசிப்பதிலும் இதையிட்டு ஆழ்ந்து யோசித்தலிலும் நேரத்தைப்பயன் படுத்தினேம். பலசமயங்களைப்பற்றி வாசிப்பதாலும் விஷயம் தெரிந்தவர்களுடன் உரையாடுவதாலும் ஒவ்வொரு சமயத்தினதும் நல்ல அம்சங்களை அவதானித்து மெச்சக் கூடியதாயிருந்தது. இதனல் எச்சமயத்தை பற்றியும் குறைபாடு சொல்கிற மனப்பான்மை நின்று விட்டது. ஒவ்வொரு சமயமும் ஈசனை அடைவதற்கு ஒவொருவழி என்று தென்பட்டது.

சூடானில் ஐந்து ஆண்டுகள் ஓடி முடிந்தன. என்ன ஆரம்பத்திற்கும் ஒரு முடிவு வருவதுபோல் சூடான் வாழ்வும் முடிந்தது. புதிய சிதோ

(12ம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலங்கையில் மலர்ந்த காதல் பிரபந்தம்

க. சி. குலரத்தினம்

காதல், வீரம் என்னும் இரண்டும் தமிழ்ப்பண்பாட்டில் பழங்காலம் முதலாகவே பழகிவந்தவை. குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு முதலிய தொகுப்புகளில் ஆயிரக் கணக்கான பாடல்கள் சிறியனவாயும் நீண்டனவாயும் காதல் நிகழ்ச்சிகளைப்படம் பிடித்துள்ளன.

காதலின் மறுபக்கம் வீரம். அது ஒருவகையில் தொழிலாய் வினைஎனவழங்கிவந்தது. வினையே ஆடவர்க்கு உயிர்.

## தமிழ் தந்த தாதாக்கள்

பாரம்பரியமாகத் தொடர்ந்து நிலவிவந்த காதல், பிற்காலத்தில் அந்தாதி, கோவைகுற வஞ்சி, மடல், தூது, உலா முதலாயஇலக்கிய விசேடங்களாய பிரபந்தங்களில் பேணிக் காக்கப் பெற்றுவந்தது.

ஈழத்தமிழ் மக்களிடையே எழுந்த காதல் இலக்கியங்கள் பல இன்றும் பசுமையாகவுள்ளன. காதல் கனிந்த நாட்டுப் பாடல்கள் பல கிழக்கிலங்கையில் முதற்தரமாயுள்ளன. இலங்கையில் பொதுவாகவும் கிழக்கிலங்கையில் சிறப்பாகவும் நிலவிவந்த பாரம்பரியத்தில் எழுந்த இலக்கியங்களுள் ஒன்று ஒரு தனிமரபில் வந்துதித்துள்ளது.

## வெருகல்

## சித்திரவேலாயுதர்

## காதல்

தமிழிலக்கியப் பரவையுள் உலா, மடல், காதல்பற்றி அதிகமாகக் கூறுவன. உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொள்ளும் மகளிர் ஏழு பருவத்தினரும் படும்பாட்டையும், கொள்ளும் மனேநிலையையும் புலவர்கள் நுணுக்கமாகக்கூறுவர். உலாவில்வரும் தலைவன் மீதுகாதல் கொள்ளுதல் ஒருவகையில் பவனிக் காதல் ஆகிறது. திருகோணமலையை அடுத்ததம்பலகாமம் பழந்தமிழ் மருதநிலம். அங்கேதோன்றிய வீரக்கோன் என்னும் பெரியார் காதல் வீரம் என்னும் இரண்டின் இயல்புகளை நன்கறிந்தவர். கண்டியரசன் இரண்டாம் இராசசிங்கனின் பாராட்டுப் பெற்ற வீரனும் புலவனுமாவர்.

வேலேந்தியவீரனும் தேவர்களின் சேனதிபதியுமான முருகப்பெருமான் சித்திரவேலாயுதர் என்னும் திருநாமத்தொடுவெருகற் பதியிலே கோயில் கொண்டுள்ளார். அவர் திருவீழாக்காலத்தில் உலாப்போந்த வேளையொன்றில் பக்திப்பரவசமுற்ற புலவர், நாயகிபாவனையில் தம்வயம் இழந்து காதல் கொண்டு, ''வெருகல் சித்திர வேலாயுதர் காதல்'' என்னும் பிரபந்தத்தைப்பாடினர்.

## உலாச்சிறப்பில்

## சிறுமிகொண்ட

## பெரியகாதல்

பலாமரத்தின் நுனிக்கொப்பொன்று மிகச்சிறிது அதில் தொங்கிய பழம்மிகப்பெரியது. இதைக்கண்ட சங்காலத்துப் புலவரின் வாய்சும்மா இருக்க

(12ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.
போன்: 23199

T. C. C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம்:- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

யாழ்ப்பாணத்து நகர மத்தியிலிருந்து நாற்புறமும் ஐவைந்துமைல் இடப்பரப்புக்குள் இதுகாலவரை வேறெந்த நாடகங்களுமே வருவாயை நோக்கிமேடை ஏருமல் தனது பரந்த செல்வாக்கினுல் தடுத்து வந்த சோமசுந்தரத்தாருக்கு சோதனைகாலந் தொடங்கிவிட்டது

செம்மாதெருக் குளத்தடியில் ஒன்று, நல்லூரில் ஒன்று, நர்வலர் பாடசாலையடியில் ஒன்ருக பட்டணஎல்லைக்குள் மூன்றும் பட்டணத்தை அடுத்துள்ள பகுதிகளில் ஒன்று ரெண்டுமாகப் போட்டிக் கொட்டகைகள் அதிகமாகிவிட்டன,

ஒருமாதம் சோமசுந்தரத்தாருக்கு இந்தியாவிலிருந்து ஒருநாடகக்குழு வந்துவிட்டால் அடுத்த அடுத்தமாதங்களில் மற்றவர்களின் கொட்டகைகளுக்கு சிறப்பான வேறு வேறு குழுக்கள்வந்து சேர்ந்துவிடுவது மல்லாமல், உள்ளூர் நாடககாரர்களும் இந்திய நாடககாரர்களோடு சேர்ந்து சேர்ந்து நடித்ததால் பொது

## வீரம்!

வீதியில்
இறங்கிவிட்டால்
அவரது நடை
ராஜ நடைதான்.
நெஞ்சை நிமிர்த்தி
நடந்து
வருகையில்
இடையில் இருக்கும்
'பெல்ட்டை' மட்டும்
தடவிக் கொள்வார்.
வீதியில் செல்லும்
எவருமே
அவரைக் கண்டால்
அடங்கி ஒடுங்கிச்
செல்வதைக் காண
மேலும் வீரம்
அவருள் ஏறும்.
இறுமாப்புடனே
சென்ற அவரை
தடுத்து நிறுத்தினர்
காவற்படையினர்.
''எத்தனை பேரை
கொலை செய்தாய் நீ?
என்ன உனக்கு
சண்டித்தனம்?''
என்று அவர்கள்
வினவிய போது—
முப்பத்திரண்டு
பற்களுந்தெரியச்
சிரித்தவாறே
''என்
மேசையில் வைத்த
இனிப்பில்
மொய்த்த
இலையான்கள்மீது
விட்டஓரடியில்
ஒன்பதுபேர்
ஒன்ருய்மாய்ந்தனர்
அதனைக்கண்டதும்
என்னுள் ஒருவகை
வீரம் எழுந்தது
வீதியில் இறங்கி
நான்
நடந்தபோதெலாம்
அனைவரும் ஏனோ
பயந்து ஒதுங்கினர்
அது எனக்கு
மேலும் ஒருவகை
வீரத்தைத்தந்து''
என்று கூறினுன்.

நிராயுதபணியாய்
சந்தியில்நின்ற
கூட்டத்தின்மீது
பொல்லுகள்
தடிகள்
ஆயுதங்கொண்டு
தாக்குதல் நடத்திய
கூட்டம் ஒன்று
இறுமாப்புடனே
வீதிகள் தோறும்
ஊர்வலம்வந்த
வேளையில் எனக்கு
அந்தவீரனின்
நினைவே எழுந்தது!

-ரஜனி




## தொடர் நவீனம்

வான செல்வாக்குமற்றக் கொட்டகைகாரர்களுக்கு ஏற்பட்டுவந்ததைத் தடுக்கச் சோமசுந்தரத்தாரால் முடியவில்லை.

மற்றக்கொட்டகைகாரர்களுக்கு நாடகத்தைப்பற்றிய படிப்புவாசனை இருந்ததால் அப்போதைக்கப்போது புதிய புதிய நாடகங்களை எழுதி, உள்ளூர்நாடக நடிகர்களையும் ஓரிருவெளியூர் நடிகர்களையும் கலந்து பயிற்றுவித்து அதிக முற்பணவிரயமின்றியே நாடகங்களை மேடைஏற்றி விடுவார்கள்.

சோமசுந்தரத்தாருக்கோ ஒரு மண்ணும் தெரியாது. இது இரண்டுதலைமுறைத் தொழில்; அவ்வளவுதான்!

''சோமருக்கு மங்குசனி'' என்றபேச்சு ஊரெல்லாம் அடிபடத் தொடங்கிவிட்டது. இது போதாதென்று ''பொதுவில் நாடகக் கொட்டகைகாரர்களுக்கெல்லாம் மங்குசனி பிடித்ததுபோல வாய்பேசாத சினிமாப்படமும் வேறுவந்து தொலைத்துவிட்டது'' என்று மட்டும் இல்லாமல் வாய் பேசும் படமேவந்துவிட்டது.

வாரத்திற்கு இருதடவைகள் என்றிருந்த நாடகங்கள், வாரம்ஒன்ருகி இருவாரம் ஒன்ருகி, மாதம் ஒன்ருகி, முடிவில் அதுவும் நடத்துவது கஷ்டமாகிவிட்டது.

ஜனங்கள் சினிமாக்கொட்டகைகளை நோக்கிப்படை எடுத்தனர்.

நாடகக் கொட்டகைகளைத் தேடுவார் இல்லை.

ஆரம்பத்தில் புதிதாகத் தோன்றிய நாடகக்கொட்டகைகளுக்கு எதிராகவும், பிற்பகுதியில் சினிமாக்கொட்டகைக்கெதிராகவும் தனது அடியார் கூட்டத்தை ஏவி செய்யாதவேலையெல்லாம் செய்து பார்த்தசோமசுந்தரத்தார் கடைசியில் ஓய்ந்தே போனுர்.

பண்டாரிக்கு தன்னுலேயே மவிசு குறைந்து விட்டது. ''சோமரைத்தவிர வேறுயாரையும் பண்டாரியின் றிக்சோ ஏற்ருது'' என்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட தனக்கு இப்போதுவயிற்றுக்காக ''யாரையேனும் ஏற்றலாம்'' என்றநிலைவந்துவிட்டதாயினும், எடுத்துக்கொண்ட பிரமாணத்தை கடைசிவரை காப்பாற்றிவிடவே அவன் முயன்றுவந்தான்.

மூத்தமகன் ஒருலோக் கடாக்காரரைவைத்து யாழ்ப்பாணஸ்ரேசன் சவாரியைப் பிடித்துக்கொண்டு உழைக்கத் தொடங்கிவிட்டான்.

மகளைக்கட்டிய மருமகன் கட்டிடவேலைக்காரனுக [illegible] தால் சுதந்திரமாகத் [illegible] செய்யத் தொடங்கிவிட்டான்.

இரண்டாவது மகன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியடியில் அப்போதைக்கப் போது ஈரொட்டு பழக்கடை போட்டுக் கணிசமாக உழைக்கிருன்.

கடைக்குட்டியன் சரியான வாயாடி, எப்படியோ நாளொன்றுக்கு வீட்டுத் தேவைக்கு மேலாகச் சம்பாதித்துவிடுவான்.

இந்தநிலையில் பண்டாரி உழைத்துத்தான் குடும்பத்தைக்கொண்டுபோகவேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

சோமசுந்தரத்தாரும் இரண்டு பெட்டைகளுக்கும் இரண்டு பெடியன்களுக்கும் தந்தையாகி, பேரன் பேத்திகளையும் கண்டுவிட்டார். பேரன் பேத்திகளைக்கண்டுவிட்ட சிந்தனை ஏதும் இல்லாமல்தான் சோமசுந்தரத்தார் நடைமுறையை அமைத்துக்கொள்ள விரும்பினுர். ஆனுல் உடம்பு இடந்தரவில்லை.

வாலைவயதின் எண்ணங்கள் சிலவேளைகளில் அவரைப் பிடித்து உலைக்கும். கடைசியில் ''காலைக்காலையாவது ஆட்டினுல் என்ன'' என்று சிந்திப்பதுபோன்று. ''புதிதாக ஒரு கொட்டகைகட்டி, நவீனமான நாடகங்களைப் போட்டால் இப்படிஒரு எண்ணம் ஒருதடவை தலைஎடுத்தபோது முற்றவெளியில் திறந்தவெளி அரங்கு ஒன்றைஅமைத்து கௌவுன்சில் சிலவில் இலவசமாகப் பறுவத்துக்குப் பறுவமும், சிலவேளைகளில் இடைஇடையேயும் நாடகங்களைப் போடத் தொடங்கிவிட்டார்கள்

சோமசுந்தரத்தாரின் நவீன எண்ணம் இதனுல் முளையிலேயே கருகவேண்டியதாயிற்று.

கண்களை மூடிக்கொண்டு மேலும் பத்தாண்டுகாலம் ஓடித்தீர்த்துவிட்டது.

இந்தப்பத்தாண்டு காலத்தில் நகரத்தில் எத்தனையோ மாற்றங்கள்! நகரத்தில் மட்டுமல்ல கிராமங்களில் கூடத்தான்!

சோமர்சந்ததியினரின் நாடகக்கொட்டகை இருந்தஇடமே சுவடற்றுப் போய்விட்டது

சோமருக்கும்வயது எழுபத்தைந்துக்கு மேல்ஆகிவிட்டது.

சோமசுந்தரத்தார் வீட்டோடும் சாய்மனைக் கட்டிலோடுந்தான் கிடந்தார்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் குறைவின்றிப்பார்த்தனர். பெருமளவு, இந்தவயதில்பிரத்தியேகமாக வேறென்னசிலவு வரப்போகிறது!

[illegible] கிராமங்களும் மாற்றமடையத் தொடங்கியபோது ஆங்காங்கே சாதிமுறைக்கு எதிரான இயக்கங்கள், இழப்புக்கள், வெற்றிகள் என்றவிதத்தில் பலதுநடந்துகொண்டிருந்தன.

இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாத மனிதனுக, வீட்டின் கோடிப்புறத்து மாலுக்குள் தள்ளப்பட்டுக் கிடக்கும் றிக்சோவைப் பார்த்துப்பார்த்து பெருமூச்சுவிடுவதைமட்டுமே ஒரு தொழிலாகக் கொண்டு ஏங்கிப்போய் கிடந்தான்.

சோமசுந்தரத்தாரும் அவர் ஆடியஆட்டங்களும், அதில் தான் எடுத்துக்கொண்ட பங்குகளும், அவர்தனது றிக்சோவில் இராசகொலுவிருக்கும் காட்சிகளும் அவன்கண்களுக்கு முன்னுல் அணிவகுத்து வராத நாட்களே இல்லை

★

வீட்டோடும் கட்டிலோடும் ஒட்டிக் கிடந்த சோமசுந்தரத்தாருக்கு ஒருபொற்காலம் பிறந்தது.

பாராளுமன்றத்தேர்தலுக்கு நின்ற ஒரு புத்திசாலி ஒரு பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்க சோமசுந்தரத்தாரைப் போட்டுவிட்டான். சோமசுந்தரத்தாருக்குத் வந்ததேமவிசு! தலைமை உரையில் அவர்பேசினுரே ஒரு பேச்சு. மனிதனுக்கு எங்கிருந்துதான் சிந்தனைகள் வந்தனவோ?

அன்றையிலிருந்து சோமசுந்தரத்தார் ஒரு நவீன சோசலிஸ்ட்' ஆகிவிட்டார்.

உலக அனுபவங்கள் நிறைந்த அவரின் சொற்பெருக்குகள் எல்லோருக்கும் பிடித்திருந்தன.

அந்தத் தேர்தல் காலத்தில் தொடர்ந்து அவர் பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினுர்: கௌரவப் பேச்சாளராகவும் பேசினுர்.

இந்தத் தள்ளாத வயசுக் கிழவனை வைத்து வாக்குச் சேகரிக்கும் அபேட்சகரின் முயற்சி நீண்டுகொண்டே போயிற்று கேலியும் கிண்டலுமாக சோமசுந்தரத்தார் மற்றைய அபேட்சகர்களைத் தாக்கும் பாணி அபாரம்! அதற்காகவே சனம் திரண்டது.

சோமசுந்தரத்தார் பேசிய எந்தக் கூட்டத்திலும் பண்டாரியும் கலக்கத் தவறியதில்லை! கலந்ததாவது? கூட்டத்தின் முன் வரிசையில் இருந்து அவரின் ஒவ்வொரு நகைச்சுவைக்கும் வெடித்துச் சிரித்து, கைகொட்டி ஆரவாரித்து அமர்க்களமே செய்து கொண்டிருப்பான்!

வாக்களிப்பு முடிந்தது.

சோமசுந்தரத்தாரின் அபேட்சகர் தோற்றுப்போனுர். ''சோமசுந்தரத்தார் இல்லாட்டி உவர் கட்டுக்காசும் எடுத்திரார்!'' என்ற பேச்சு தேர்தல் முடிந்ததும் அடிபட்டது சோமசுந்தரத்தார் காது வரை விழவே செய்தது.

சோமசுந்தரத்தாருக்குப் புதிய உற்சாகங்கள்தான் பிறந்தது.

அபேட்சகர் தோற்றுப் போனுலும் அவர் தோற்கவில்லை.

தேர்தலைத் தொடர்ந்து ஆங்காங்கே நடந்த பல வேறுபட்ட கூட்டங்களில் பேசுவதற்காகச் சோமசுந்தரத்தார் அழைக்கப்பட்டார்.

அவருக்கென்று தனியாக ஒரு கட்சி இருக்கவில்லை.

எங்கு போனுலும் சோசலிச வாழ்க்கையைப பற்றித்தான் பேசுவார்.

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ் என்ற சொல்லின் பொருள்

தமிழ் என்ற சொல்லுக்கு (1) அறியாமையை நீக்குவது, (2) இனிமையுடையது, (3) ஒப்பில்லாதது, (4) தகவுடையது, (தகுதி), (5) வல்லினம் மெல்லினம் இடையினம் உடையது என ஐந்து பொருள் கூறி விளக்குகிருர் அறிஞர் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள். அவர் தரும் விளக்கம்:

''பிரயோக விவேக நூலார் திரமிளம் என்னும் வட சொல்லே தமிழ் எனத்தற்பவமாயிற்று என்பர். மற்ெருருவர் இனிமையுடையது என்பர். பேரிசைகாரரும் ''தமிழ் சிவமின்மையெனும் தனிப் பொருளாம்'' என்பர் மற்ெருருவர் தனிழகரமுடையது என்பர். மற்ெருருவர் தகவுடையது என்பர். மற்ெருருவர் மூவினமுமுடையது என்பர்.

திரமிளம் என்பதன் தற்பவம் என்றவர் திரமிளம் அறியாமை நீக்குவது என்பர். இனிமை உடையது என்றவர் தமிழ் இனிமை ஆகுபெயர் என்பர். ஒப்பில்லது என்றவர் தமி-ஒப்பின்மை: ழகரம் விகுதி என்பர். தனி ழகரம் வடமொழிக்கும் உரியதாகாது. தமிழ் மொழிக்கே உரியதாய்த் தனியே நிற்கும் ழகரம் என்பர். தகவுடையது என்றவர் தகு என்னும் பகுதி இறுதி கெட்டு மிழ் என்னும் விகுதி சேர்த்து முடிந்தது என்பர். மூவினமுடையது என்றவர் தமிழ் என்பதிலே தகரம் வல்லினம் மகரம் மெல்லினம் ழகரம் இடையினம் என்பர்''

—முரளி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் தன்னிகரற்ற தகவல் நிலையம்

இலண்டனில் இயங்கி வரும் ''தமிழர் தகவல் நிலையம்'' என்றஅமைப்பின் பெயரைப் பற்றி இந்தப் பத்திகளில் முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தஅமைப்பை பற்றி எழுதுவது ஒருசீரிய சேவையாகும்.

''தமிழர்தகவல் நிலையம்'' என்ற தகவல் ஸ்தாபனம், 1983, ஜுன் 1ம் திகதி, ''தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக்கான மத்திய பிரிட்டிஷ் நிதியத்தினுல், அதன் ஒருகிளையாக நிறுவப்பட்டது.

எனவே ''தமிழர் தகவல் நிலையத்தைப்'' பற்றிஅறிந்து கொள்ள முன்னர், அதன் தாய்ச்சங்கத்தைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியம்.

ஜனவரி 1979ல், பிரிட்டனில், ஒருதேசிய-சர்வதேசிய தர்மஸ்தாபனமாக 'தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கான மத்திய பிரிட்டிஷ் நிதியம்' நிறுவப்பட்டது. இதனது பிரதம நோக்கம் தமிழ்இனத்தின் அதிலும் குறிப்பாக, வன்செயல்களினுல்-அடக்குமுறைகளினுல்- யுத்தத்தினுல் அனுதரவாக விடப்பட்டு வறுமைக்கு உள்ளான தமிழ்இனத்தவர்களின், அவர்களது விதவையர்-குடும்பங்களின் வறுமையை, துயர்களை துடைக்கும் நோக்கத்துடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

1977ல் ஏற்பட்ட இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் நீண்டநாளைய புனர்வாழ்வுக்கு எதுவிதவழியும் அற்றநிலை நிலவியபோது, அதன்பிரதிபலிப்பாக எழுந்ததுதான் இந்த அமைப்பு. தமிழ் அகதிகளை தமிழர் தாயகங்களில் குடியமர்த்துவதற்கு இந்த அமைப்பு பெருவாரியான நிதிஉதவி செய்துள்ளது. கடந்தஜுலை 1983 இனக்கலவரங்களை அடுத்து, உடனடியாக, ஆறுஇலட்சம் ரூபாவை தமிழ்அகதிகள் புனர்வாழ்வுக்காக இந்த நிதியம் வழங்கி உதவியது.

பற்றி அறிந்துவருகின்றனர்.

இந்த நிலையம் வாராந்தம் பிரசுரித்துவரும் செய்திநிருபம் உலகில் 39 நாடுகளுக்கு அனுப்பிவைக்கப் படுகிறது. பிரிட்டனில் குடிவரவுத்துறைக்கும் பொறுப்பான உள்நாட்டுவிவகார அமைச்சரின் அலுவலகத்தில் இந்தவாராந்த செய்திநிருபங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதை நான்நேரில்கண்டேன்.

தமிழர்களது, தமிழ்மொழியினது, அவர் தம் பூர்வீகம் பற்றியதகவல்களைத் திரட்டி, ஆய்வுசெய்து, சேமித்துவைத்து, அவற்றை உலகெங்கும் பரப்பும் சீரியசேவையில் ''தமிழர் தகவல்நிலையம்'' ஈடுபட்டுள்ளது

இலண்டனைத் தளமாகக் கொண்ட ''தமிழர் தகவல் நிலையம்'' சென்னை 34 நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரம், நாராயணன்வீதி, இல9 என்ற முகவரியில் தமிழ்நாட்டிலும் ஒருகிளையை ஏற்படுத்தி சீரிய பணி ஆற்றிவருகிறது

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் சிறக்கும்வகை செய்தல்வேண்டும்'' என்ற பாரதியின் வாக்கை தாரகமந்திரமாகக் கொண்டு ''தமிழர் தகவல் நிலையம்'', இப்போது இலண்டனில் விம்பிள்டன் பகுதியில் 5000 சதுர அடிபரப்புள்ள புதியதொரு கட்டடத்திற்கு மாறுவதற்கு தயாராகி வருகிறது. இந்தப் புதிய செயலகத்தில் ஒரு பெரிய நூலகம், சஞ்சிகைக் களஞ்சியம்' தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள், இசைத் தட்டு- கஸெட்- வீடியோ ரேப் களஞ்சியங்கள், கருத்தரங்குக் கூடம், தமிழ் ஆராய்ச்சிக் கூடம், தமிழ் அச்சகம், தமிழ்க் கலைக் கூடங்கள் என்பனவற்றை உள் அடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் தகவல் நிலையத்தின் சீரிய பணிகளைப் பாராட்ட விரும்புபவர்கள் பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்: The Tamil Centre 106 Augustus road Wimbledon, London S-W19 U.K உங்கள் கடிதங்கள் அவர்களுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.




எரியுண்டயாழ் நூலகத்திற்கு பல்வேறு கல்வித்துறைகளைச் சார்ந்த 6000 நூல்களைத் திரட்டி, அன்பளிப்பாக வழங்கியது. ''சொர்க்கத்திலிருந்து பிரதிஷ்டம் செய்யப்பட்டவர்கள்'' என்ற திரைப்படத்தை உருவாக்கி, அதைஉலகு முழுவதும் அனுப்பி, தமிழ்அகதிகளுக்கு நிதிதிரட்டியது இந்த நிறுவனம். சர்வதேச நிதி வழங்கும் ஸ்தாபனங்கள் பலவற்றுடன் ஒருங்கிணைந்து, தமிழர் தாயகங்களில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதிதிரட்டியது.

இந்தநிதியத்தினுல் இலண்டனில் நிறுவப்பட்ட ''தமிழர் தகவல் நிலையம்'' கடந்த ஜுலை வன்செயல்களின் பின் ஆற்றிய சேவை அளப்பரியது அக்காலகட்டத்தில் அதன் அலுவலகம் 24 மணிநேரமும் திறந்துவைக்கப்பட்டு, சீரிய பணி ஆற்றியது. சர்வதேச பத்திரிகையாளர்கள், வானெலி-தொலைக்காட்சி நிருபர்கள் அன்றும் இன்றும் ''தமிழர்தகவல் நிலையத்'' துடன் தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர்பிரச்சனை

## இங்கிலாந்திற்கு மேலாக 'பறக்கும் தட்டுக்கள்'


இங்கிலாந்தில் யோக்ஷயர் பகுதிக்கு மேலால் வானில் பறந்த ஒரு அதிசய உருவம் பறக்கும் தட்டுத்தான் என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சிகப்பு விளக்குகளோடு கூடிய அந்த அமைப்பு சுமார் 30 செக்கன்களுக்கு தென்பட்டதாம். விளக்குகள் ஏதோ ஒரு லயத்துக்கு அமைய மின்னி மறைந்து கொண்டிருந்தனவாம்.

இந்த அமைப்பைக் கண்ணுற்ற ஒரு போலீஸ் அதிகாரி அதைத் தனது கமராவால் உடன் படம் பிடித்துக் கொண்டார் இந்தப் படத்தை அமெரிக்காவிலுள்ள அறிஸோஸனு பறக்கும் தட்டு

(10ம் பக்கம் பார்க்க)

மஹாகவி தண்டி என்பவர் வடமொழிக் கதாசிரியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர். இவர் எழுதிய தசகுமாரசரிதம் என்னும் வடமொழி நூல் உலகப்பிரசித்தி பெற்றது. அதிலே உள்ள கிளைக்கதைகளுள் ஒன்று காமமஞ்சரி என்னும் கணிகை மாதின் கதையாகும். இக்கதை மிகவும் புதுமையானது. இக்கதையின் ஓர் அம்சத்தையடிப்படையாகக் கொண்டு இச்சிறு கவிதை நாடகம் படைக்கப்பட்டுள்ளது. மனித பலமும் பலவீனமும் சித்தரிக்கப்படும் இந்நாடகமூலம் வஞ்சனையின் வெற்றி மனித சமுதாயத்துக்கு ஓர் போதனையாகவே அமைகின்றது என்ற உண்மை போதிக்கப்படுகிறது.




### கவிதை நாடகம்

### காட்சி — 4

இடம்: விழா அரங்கின் ஒருபுறம்
பாத்திரங்கள்: முனிவர்
காமமஞ்சரி

வசந்தவிழா நிறைவேறிவிட்டது. விழா முடிவில் காமமஞ்சரியும் முனிவரும் வீட்டுக்குப் புறப்படுமுன் நிகழ்ந்த உரையாடல்.

[உரையாடல் தொடங்குமுன்னர் ஒரு விழா நடைபெறுகிறதென்பதை ஒலிமூலம் காட்டுதல் நன்று.]

முனிவர்:
கண்ணே காம மஞ்சரி, இந்த
மண்ணே புகழும் வசந்த விழாவில்
அரியவுன் ஆடல் அழகினைக் கண்டு
பெரிதும் மகிழ்ந்தேன்.

காம:
... நன்றி சுவாமி.

முனி:
ஆடற் கலைக்கே அணிகலம் நீயே
தேடற்கரிய தித்திக்கும் தேனே
ஆடகப் பொன்னே அமுதே உன்னை
அடைந்த நானேர் அதிஷ்ட சாலி

காம:
போதும் புகழ்ச்சி...

முனி:
புகழ்ச்சியல்ல
உள்ளதைத் தானே உனக்குச் சொல்கிறேன்
தெள்ளமுதே இந்தச் சிறியேன் உனக்கு
என்ன கைமாறு இயற்றப் போகிறேன்
தன்னந் தனியனுய்த் தவம் செய்த எனக்கு,
இன்ப மென்றால் எதுவெனக் காட்டிய
அன்பே, என்தன் ஆருயிர் தனையும்
உனக்காக ஈய ஒரு போதும் தயங்கேன்!

காம:
சுவாமி! நானேர் பாக்கிய சாலி
உங்கள் உதவி இல்லை யென்றிட்டால்
இன்றைக் கென்னிடம் தோற்ற சண்பக
வல்லியாள் வீட்டு வாயிற் படியில்
அடிமை புரியும் தாசியா யிருப்பேன்
[பெருமூச்சு விடுகிறுள்]

முனி:
என்னையும் வென்று, அந்த ஏந்திழை
தன்னையும் வென்ற சமர்த்துக் காரி
சகல கலாவல்லி

காம:
[சிரிக்கிறுள்]
நன்றி தேவரீர் நன்றி...

முனி:
கண்ணே
நேர மாகுது நீயும் களைத்து
விட்டாய் ... வீடு நோக்கிச் செல்வோம்

காம:
ஆமாம் ஐயா!
நேரம் நெருங்கி விட்டது, நாங்கள்
பிரிய வேண்டிய உரிய நேரம்
பெரிய முனிவ! பேதை யெனக்கு
சிறியதோர் உதவி செய்திட வேண்டும்

முனி:
[மகிழ்ச்சிச் சிரிப்புடன்]
உள்ளம் கவர்ந்த உயிரோ வியமே
உனக்கென் உயிரையும் உதவுவேன், என்ன
உதவி வேண்டும்
உரைத்திடு செய்கிறேன்.

காம:
சண்பக வல்லியைச் சமர்த்தாய் வெல்ல
உங்களை யடைந்தேன் உதவிசெய்தீர்கள்
அந்த உதவியைஇந்தப் பேதை
எந்த நாளும் மறந்திட மாட்டாள்

முனி:
பழைய கதையிது

காம:
படித்த பெரியோய்!
காரணத்தோடுதான் இதனைச் சொல்கிறேன்
பூரண வெற்றி பூண்டு அவளை
அடிமைப் படுத்திய பின்னர், நானே
வீணுய் உங்களை வீட்டில் வைத்து
வருத்துவ தென்பது பெருத்த பாவம்

முனி:
பாவமா? அதுவென் பாக்கிய மன்றோ

காம:
இல்லை முனிவரே, இனிமேல் உங்கள்
உதவி எனக்குத் தேவையே யில்லை
ஆதலால் சுவாமி அடியேனை மன்னித்துக்
காதலால் விட்ட கடுந்தவம் செய்யக்
கானகம் செல்க, நான்மனை செல்கிறேன்

முனி:
மஞ்சரி! என்ன வார்த்தை செப்பினுய்
இதற்குத் தானு எனது தவத்தையே
உதறி விட்டு உன்னோடு வந்தேன்
மனதால் கூட உனக்கோர் ஊறு
நினைக் காத என்னை நீபிரி யாதே

காம:
முனிவரே நானேர் கணிகை எனது
பணியைப் பற்றி படித்தநீர் அறிவீர்
எனது லட்சியம் நிறைவேறி விட்டது
இனிஉமைப் பற்றி எனக்கேன் கவலை?

முனி:
அப்படிச் செப்பாதே காம மஞ்சரி
காதலின் புனிதத் தன்மையை மறந்து
பேசுதல் தவறு பெண்ணே—

காம:
... முனிவரே,
காதலைப் பற்றிக் கணிகை யெனக்கேன்
ஓதுநீர்...

முனி:
... மஞ்சரி உதுபெருந் தவறு

காம:
தவறே சரியோ அதைப்பற்றி எனக்கேன்
கவலை
என்தன் நோக்கம் இன்றுடன்
நிறைவேறி விட்டது. பிறகென்ன பேச்சு

முனி:
வஞ்சகி நீயோ நஞ்சினுங் கொடியள்
பஞ்சமா பாதகி வஞ்சித்தே விட்டாய்

[9ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரமான விலங்கினங்கள்

### காண்டாமிருகம்.

பாலூட்டிகளில் மிக்வும் பெரியது எது என்று கேட்டால் யானைஎன்று கூறுவீர்கள். அதற்கு அடுத்தது காண்டாமிருகம். இவற்றில் ஐந்துவகைகள் உள்ளன. இருவகை ஆபிரிக்காவிலும் மூன்று வகை ஆசியாவிலும் காணப்படுகின்றன இவைபார்வைக்குப் பூதாகாரமான தோற்றம் உள்ளவையாக இருந்தாலும் மிகவும் சாதுவானபிராணிகள் இவை எந்தப்பிராணியையும் கொல்வது இல்லை இவற்றின் கண்பார்வை மிகவும்மங்கலானது.




### காட்டுப்பூனை.

உருவத்தில் காட்டுப்பூனை வீட்டுப்பூனையை விடமிகவும் பெரியது அதன்வால் நரியின் வாலைப்போல காணப்படும். மரம் ஏறுவதில் திறமை படைத்த காட்டுப்பூனை பறவைகளையும்' எலிகளையும், சிறியபிராணிகளையும் தனது உணவாகக் கொள்கிறது. சில வேளைகளில் அதுபழவகைகளையும் உண்ணும் பயங்கரப்பாம்புகளைக்கூட எலிகளைக் கொல்லுவது போல காட்டுப்பூனை இலகுவில் கொன்றுவிடவல்லது. இதுபெரும்பாலும் இரவு வேளைகளிலேயே தனதுஉணவு வேட்டையில் ஈடுபடுகிறது ஐரோப்பா ஆபிரிக்காகண்டங்களில் உள்ள பெரியகாடுகளில் காணப்படுகின்றன.

### உவால்ரஸ்

உலகத்தில் உள்ள அவலட்சணமான பிராணிகளுள் ''உவால்ரஸ்'' என்னும் நீர்யானையும்ஒன்று இது பார்வைக்கு மிகவும்சாதுவானது சோம்பேறியைப் போலபடுத்துக் கிடக்கும் ஆனல்கோபம் வந்தால் மிகவும் பெல்லாதது.

### லாமா

தென்அமெரிக்காவில் ஒட்டகங்களே இல்லை. ஆனல் அவற்றுக்குஉறவு உள்ள ''லாமா'' என்னும் ஒருவகைப்பிராணிகள் உள்ளன பார்வைக்கு ஒட்டகங்களைப் போலஇருக்கும் இந்த ''லாமா''க்கள் உருவத்தில் சிறியவை ஒட்டகத்தைப்போல பாரமான சுமைகளைத். தாங்கும்சக்தி இல்லை லாமாவிடம் விசித்திரமான வழக்கம் ஒன்றுஉண்டு அது. என்னதெரியுமா? தனக்குப் பிடிக்காதவர்கள் கிட்ட வந்தால் அவர்கள் முகத்தில் காறி உமிழ்ந்துவிடும்.

(தொடரும்)

**வி. என். எஸ். உதயசந்திரன்**

# "குள்ளநரியின் தந்திரங்கள்"

வர்ணனை நடந்தது 'பாடகி' என்றே
வஞ்சனை அறியாத காகமோ
வாயைத் திறந்து கொள்ளவே
வடையும் கீழே வீழ்ந்தது.

நீரில் இருந்து வெளியேறி
நிலவினில் உலாவும் ஆசையினுல்
அதனுடன் வந்த நண்டுகளோ
அழிந்து போயின.

காக்கா சொன்னது:
'வடையை இழந்தேன்'
நண்டுகள் சொல்லின:
'இனத்தை இழந்தோம்'

இவர்கள் நண்பன் பூனையோ
நன்ருய் யோசனை செய்தது.

குள்ள நரியின் தந்திரங்கள்
குலத்தை அழித்திடும் குணமென்று
குறியும் வைத்தே அமைத்தது
குலையாய்த் தொங்கும் தோட்டத்தை.

ஆருப் பசியுடன் உட்சென்ற
அந்த நரியார் 'நான் தின்பேன்'
என்றே நாவில் நீர் ஊற
நன்ருய்த் துள்ளிப் பாய்ந்தாராம்

நாவில் பழமும் எட்டாதாம்
களைத்துப்போன நரியனுர்
கண்ணீர் சிந்தாக் குறையுடன்
உந்தப் பழம் புளிக்குமென்றே

உடனே ஓடிச் சென்ருராம்.

- **வான்மதி**
**சண்முகலிங்கம்**
[வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 9ம் வகுப்பு]

# வடை மனிதன்

**பிலோ ராம்சந்த்**

பொன்னம்மாவின் பேரனும் பேர்த்தியும் பள்ளி விடுமுறைக்கு அவளிடம்வந்து ''பாட்டி பாட்டி, வடைசாப்பிட ஆசையாயிருக்கிறது. எங்களுக்குப் பருப்புவடை பொரித்துத் தாருங்கள் என்று கேட்டார்கள். பொன்னம்மாவும். ''பருப்புவடை தானே நான் சோயாவடை பொரித்துத்தருகிறேன்'' என அன்புடன் கூறி அதற்கான ஆயத்தங்களைச் செய்தாள்.

ஒவ்வொருவடையாக எண்ணெயில் பொரித்துக்கடகமொன்றில் ஒவ்வொன்ருகப் போட்டுக் கொண்டிருந்தாள் பொன்னம்மா. திடீரென ''ஹாஹா- ஹாஹா'' என்ற சத்தம் கேட்டுப் பொன்னம்மா அங்குமிங்கும் திரும்பிப்பார்த்தாள். பேரனும் பேர்த்தியும் களவாக வடைகளைத் திருடிவிட்டுத்தன்னுடன் ஒளிந்து விளையாடுகிருர்களோ என எண்ணிச்சுற்றும் முற்றும்பார்த்தாள். யாரையும் காணவில்லை. அவள்மீண்டும் வடையைப் பொரிப்பதில் கவனம் செலுத்தினுள். திரும்பவும் அதேசத்தம் கேட்டு தற்செயலாகக் கடகத்தைப் பார்த்தாள். அங்கே-

மற்றவடைகளின் நடுவே வடைமுகத்தில் கண்கள், வாய், மூக்கு எல்லாம் அமைந்து, மெல்லிய சிறிய கைகளும், கால்களும் உருப்பெற்று வடை மனிதனைக் காட்சியளித்தது. இதனைக் கண்டு ஆச்சரியமடைந்த பொன்னம்மா, தன்பேரன் பேர்த்தியைக் கூவி அழைத்தாள் அவர்கள் இருவரும் ஓடிவந்து ஆச்சரியத்துடன் அந்தச் சிறிய வடைமனிதனைப் பார்த்தார்கள். அது மெதுவாகக் கடகத்தினுள் இருந்து வெளியே இறங்கி ''நான் இந்த மனித உலகத்தைப்பார்க்க வரமெடுத்து வந்திருக்கிறேன். நீங்கள்தான் அந்த மனிதர்களா?'' என அவர்களைப் பார்த்துக் கேட்டது.

குழந்தைகள் சந்தோசம் தாளாமல் துள்ளிக் குதித்தபடி ''ஆம், ஆம் நாங்கள்தான் அந்த மனிதர்கள்'' என்று கூறினுர்கள்; பொன்னம்மா திறந்த வாய் மூட மறந்தவளாய் அப்படியே அதிர்ந்து போய்விட்டாள்.

அந்த வடை மனிதன் சமையலறையைப் பார்த்து ''ஏன் இப்படி இருட்டாக இருக்கிறது'' எனக் கூறிக்கொண்டு அங்கிருந்து வெளியேறியது. வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளையும் தொட்டுக் காட்டி ''இது என்ன அது என்ன'' என வினவியது. குழந்தைகள் எல்லாம் விபரமாகச் சொன்னுர்கள். பின்பு வெளியே இறங்கி நடக்க ஆரப்பித்தது. வெய்யிலின் வெப்பத்தை அது தாங்க மாட்டாமல் ''ஐயோ இது என்ன உடம்பெல்லாம் எரிகிறதே? உங்களுக்குச் சுடவில்லையா?', எனக் கேட்டது.

''ஒ ...அதுவா அதுதான் சூரியன். இது இல்லாவிட்டால் உலகமே இருட்டாகிவிடும். இதனுல் நமக்குப் பல நன்மைகள். நம் பாட்டிமார் இதனை சூரியபகவான் என்று கூறிக் காலையில் வணங்குவார்கள்'' என்ருர்கள் பிள்ளைகள்.

''ஆகா அப்படியா''என்று கூறிவிட்டு' மீண்டும் பூக்களையும் பலவர்ணங்களில் பறந்த வண்ணுத்திப் பூச்சிகளையும் பார்த்து ஆச்சரியப்பட்டது; விநோதமாக ஒவ்வொன்றையும் பார்த்தது.

தூரவயல் வெளியில் தோட்டம் செய்பவர்களைக் கண்ட வடைமனிதன், ''ஏன் இந்த வெயிலில் இப்படி வேலைசெய்கிருர்கள். ஐயோ பாவம்' இவர்கள்'' என்றது ''வயலில் உழுதுநெல் விளைவிக்காவிடில், தோட்டம் செய்து காய்கறி

[10ம் பக்கம் பார்க்க]

# உறவும் துறவும்

[8ம் பக்கத் தொடர்ச்சி]

காம:
முனிவரே! என்னை முனிந்தென்ன லாபம்
திட்டுங்கள் நானே சிரித்துக் கொண்
டேற்பேன்
ஏனென்றுல் நீங்கள் எனக்கு ஒருமுறை
உதவி யிருக்கிறீர் நன்றி மறப்பனு?

முனி:
சாகசக் காரி தவத்தையே அழித்த
மோகப் பிசாசே முன்னுல் நிற்காதே
போய்விடு பிசாசே போய்விடு (அழுகிருர்)

காம:
[சிரிக்கிருள்]

முனி:
நன்றி கெட்டவளே நாணமற்றவளே
இன்னுமா நிற்கிருய்?...

காம:
[ஏளனச் சிரிப்புடன்]
செல்கிறேன் முனிவரே ... மீண்டுமென்
நன்றி

முனி:
[அழுதபடி]
இறைவா! இதுவா உன் சோதனை.
இதுவா தீர்ப்பு
முறையோ தெய்வமே இந்த மூடனை
மன்னிப் பாயா? மன்னிப் பாயா?
[விம்மி விம்மி அழுகிருர்]
பெண்ணெனும் மாயப் பிசாசிடம் சிக்கி
கண்ணியம் இழந்த கயவனும் என்னைக்
கண்ணுத லானே! காத்தருள் புரிக.
பாரோர் பழிக்கும் பரத்தை யிடம்போய்
ஊரார் தூற்ற ஒருகதி யின்றி
நிற்கும் இந்த நீசனை, ஏற்றுக்
கற்றைச் சடையாய்! காத்தருள் புரிக.
புண்ணிய மழித்த புலையனைப், பாவப்
பொதியினைச் சுமக்கும் புல்லனை, ஈசா
காத்தருள் புரிக காத்தருள் புரிக.
[விம்முதல்]
ஓம் நமச்சி வாய. ஓம் நமச்சி வாய.
ஓம் நமச்சி வாய.

— திரை —

(முற்றும்)

வெளிநாடு செல்வதற்கு
விமான டிக்கட்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.
8, மருத்துவத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

## திருமலே வே. ரவீந்திரன்

### மேஷம்

ஆசை அலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும். ஆணவப் போக்கினுல் பிறரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். மன அடக்கம் நன்று. எக்கருமத்தையும் எண்ணித் துணிக. அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டை விடக்கூடும். நிதானம் வேண்டும்.

### ரிஷபம்

இலட்சியப் பாதையில் வெற்றிநடை போடுவீர்கள். உயர்வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும். பதவி உயர்வுக்கு இடமுண்டு. வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை ஏற்படும். சில புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல் நலம் பாதிக்கப்படலாம்.

### மிதுனம்

கற்றதன் பயன் இன்று கட்டாயம் கிடைக்கும். சகோதர வழியால் மனதில் சஞ்சலமுண்டு உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் உஷாராக இருக்கவும். ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும். உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

### கடகம்

சடுதியில் முன்னேற்றமுண்டு தரமான வாழ்வு கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றி உண்டு. அறிவுப்பணியில் அதிக ஆர்வம் பிறக்கும். ஆராய்ச்சியாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம் வாகனச் சாரதிகள் பயனடைவர். தாய்வழி ஆதரவும் அவசியம் கிடைக்கும்.

### சிம்மம்

பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று. புதிய பாதையில் வழி பிறக்கும். புத்திரசுகமுமுண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும்.

### கன்னி

உங்களை வட்டமிடும் கழுகுப் பார்வை மிரட்டப் பார்க்கும். பயணத்தின்போது பொருள் நழுவக்கூடும். திருப்தியற்றநிலை தென்படும். நேர்முகப் பரீட்சைக்கு உகந்த வாரம். தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும்.

### துலாம்

இதயத்தில் இனிமை துள்ளும. பகைவர்கள் பணிவர். பரந்த நோக்குடன் செயற்படுவதன்மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும். காதலர்கள் வாழ்வில் தடைகள் விலகும். பெற்ருேர் ஆதரவுமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

### விருச்சிகம்

இனம்தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். சகோதர வழியாலும் கவலை தோன்றக் கூடும். பெரியவர் ஒருவரின் அறிவுரை ஆறுதலைத் தரும். சிறுவிடயங்கள்கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம். சிந்தித்த பின் செயலாற்றவும்.

### தனுசு

நல்லதைச் செய்வீர்கள். நலம் பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்புயரும். அரசியல்வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகள் அணைத்துக் கொள்வர். காதலர் வாழ்வில் தித்திப்பான தினம். முதியோர்கள் வாழ்க்கையில் இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும்.

### மகரம்

உள்ளம் உவகையில் துள்ளும். உறவு முறைகளில் இறுக்கம் ஏற்படும். புதியவர் ஒருவரின் தொடர்பு உங்களுக்குப் புதுப்பாதையைக் காட்டும். அறவழியில் நாட்டத்திற்கு மிடமுண்டு. வித்தையில் வெற்றி காணும். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

### கும்பம்

மெத்தவும் பொருள் வந்து சேரும். மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் மணவாழ்வுமுண்டு. உறவுமுறையும் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர். வாழ்த்தும் உண்டு.

### மீனம்

நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

## உலகில் தன்னிகரற்ற தகவல் நிலையம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அவதான நிலையத்திற்கு அனுப்பி வைத்தார். படத்தில் காணப்பட்டது பறக்கும் தட்டுத்தானென்று அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த பறக்கும் தட்டு அவதான நிலையம் கடந்த 30 ஆண்டுகாலமாக ஆராய்ந்த 1400 படங்களில் 42 படங்களையே பறக்கும் தட்டுக்களின் படங்கள் என்று உறுதி செய்துள்ளன.

இங்கிலாந்தின் யோர்க்ஷயர் பகுதிக்கு மேலாக கடந்த மூன்று வருடங்களில். உறுதிப்படுத்தப்பட்ட மூன்ருவது பறக்கும் தட்டு இதுவாகும்.

பறக்கும் தட்டுகள் எனப்படுபவை வேற்று உலகங்களில் இருந்து வரும் விண்கலங்கள் என்பதை இன்று விஞ்ஞான உலகம் பரவலாக ஏற்றுக் கொள்கிறது என்பது தெரிந்ததே.

## இலங்கைத் தமிழர் பிரச்னை தொழிற்கட்சி அனுதாபம்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரதம எதிர்க்கட்சியான தொழிற்கட்சி, இலங்கைத் தமிழர்களின் அவல நிலை குறித்து அனுதாபம் தெரிவித்தும், இனவெறியாட்டங்களிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கத் தவறியமை குறித்து இலங்கை அரசைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தேசிய செயலவை கடந்த பெப்ரவரியில் நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:

''இந்தத் தேசியசெயலவை தமிழ்ச் சிறுபான்மையினரை வகுப்புவாத வன்செயல்களிலிருந்து பாதுகாக்கத் தவறியமைக்காக ஸ்ரீலங்கா அரசைக் கண்டிக்கிறது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களையும், இவற்றில் ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளின் பங்களிப்பையும் கண்டிக்கிறது.

''ஜயவர்த்தன அரசினுல் கொண்டு வரப்பட்ட எதிர்க் கட்சிகளின் தடையையும் அடக்கு முறைகளையும் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படி தேசிய செயலவை கேட்டுக் கொள்கிறது.

ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ்ச் சிறுபான்மையினரின் நிலை பற்றி தொழிற் கட்சியின் ஆழ்ந்த அக்கறையைத் தெரிவிப்பதற்கு இலண்டனில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்திற்கு செல்லக்கூடிய விரைவில் ஒரு தூதுக் குழுவை நியமிப்போம். ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளுடன் வைத்துள்ள சகல இராணுவத் தொடர்புகளையும் பிரிட்டிஷ் அரசு உடன் துண்டித்துக் கொள்ள வேண்டுமென தொழிற்கட்சி வலியுறுத்துகிறது''

## மையக்குறி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அவர் கட்சிப் பற்றற்ற ஜனநாயக சோசலிசவாதி! அதிலும் காந்திய சோசலிசம் என்ருலே அவருக்கு உயிர்.

அவர் புகழ் நாடெங்கும் பரவிவிட்டது!

பத்திரிகைகள் பல அவரது பேட்டிகளை போட்டி போட்டுக்கொண்டு பிரசுரித்தன. வெளியூர்களில் இருந்து வருபவர்கள் மந்திரிமாரகளாயினும், அரசியல் கட்சிப் பிரமுகர்களாயினும் சோமசுந்தரத்தாரைத் தரிசிக்காமல் போனதில்லை'

(தொடரும்)


## வடைமனிதன்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டாக்காவிடில் நாம்பட்டினியாகத்தான் இருக்கவரும்; தோட்டக்காரர்கள்தான் எங்கள் உயிர்நாடி, கஷ்டப்பட்டால்தான் நாம் அதற்கான பலனை அனுபவிக்கமுடியும்'' என்ருர்கள் பிள்ளைகள்.

இதற்கிடையில் அக்கம்பக்கத்திலுள்ள பிள்ளைகளெல்லாம் கூடிவேடிக்கை பார்த்தார்கள். வடைமனிதனும் தைரியமாக, கம்பீரமாய் எங்கும்நடந்து திரிந்தது. அப்போது எங்கிருந்தோ பசியால் களைத்து ஓடிவந்த ஒரு நாய் 'லபக்கென்று' அந்தவடை மனிதனைக் கவ்விக் கொண்டு தன்பசியைத் தீர்த்துக்கொண்டது குதூகலத்துடன் இருந்த பிள்ளைகள் வடைமனிதனின் பரிதாபநிலையை நினைத்துக் கொண்டு சோர்ந்தமுகத்துடன் வீட்டைநோக்கி நடந்தார்கள்.


# நவீன உல்லாசக் குடிசைகள்



## எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
- எமது விசேஷமான ஐஸ் கிறீம்வகைகள்:

| | | |
|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்

- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள்

விளையாட்டு

அனந்த் - சூரி



[ஈழத்தின் பிரபல நாடக, திரைக் கலைஞரான திரு. கே.எஸ். பாலச்சந்திரனின் கவனம் விளையாட்டின் பக்கம் திரும்பியுள்ளது. அவர் ஓடவில்லை, பாயவில்லை, நீந்தவுமில்லை ஆனால் பாரந் தூக்குவது போல் 'ஒலிம்பிக்' வரலாற்றை எமது வாசகர்களுக்கெனச் சிரமம் பாராது இங்கு எழுதுகிறார்]

இந்த ஆண்டு... ஒலிம்பிக் ஆண்டு! உலகெங்கும் உள்ள விளையாட்டு வீரர்களின், வீராங்கனைகளின் உன்னத லட்சிய விழாவாக' நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் ஒலிம்பிக் விழா நிகழப்போகும் ஆண்டு இது...!

இவ்வாண்டு ஜூலை மாதம் 28ந் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 12ந் திகதி வரை, ஐக்கிய அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில், 23வது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. அமெரிக்க மண்ணில் மூன்றாவது முறையாக இவ் ஒலிம்பிக் போட்டிகள் நிகழ இருக்கின்றன. 1904ம் ஆண்டு அமெரிக்காவில், செயின்ற் லூயிஸ் என்ற இடத்தில் முத

## கொறீபஸ் என்ற கிரேக்க

## சமையற்காரனுக்கே ஆரம்ப

## ஒலிம்பிக்'கில் முதல் வெற்றி

லாவதாகவும், 1932ம் ஆண்டு அமெரிக்காவில் இதே லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இரண்டாவதாகவும், ஒலிம்பிக் போட்டிகள் நிகழ்ந்திருக்கின்றன. 23வது ஒலிம்பிக் போட்டிகளை எங்கள் நகரிலே நடாத்த அனுமதி தாருங்கள்' என்று லொஸ் ஏஞ்சல்ஸ் நகர மக்கள் மட்டுமே கோரிக்கை விடுத்தார்கள்... வேறு விண்ணப்பங்கள் வரவில்லை... எனவே லொஸ்ஏஞ்சல் நகரம் இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் நிகழுவதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டது... இன, மத, நிற, மொழி பேதங்களைக் கடந்து அகிலத்தின் எல்லாத் திக்குகளிலிருந்தும் வீரர்களும் வீராங்கனைகளும் அங்குவந்து குவியப் போகிறார்கள். சாதனைகளை அழித்தெழுதப்படச் செய்வார்கள் அவர்கள்... நவீன ஒலிம்பிக் போட்டிகளின் வரலாற்றில் மற்றுமோர் அத்தியாயம் புரட்டப்படப் போகின்றது. இவ் ஒலிம்பிக் போட்டிகளின் வரலாறே மிகப்பழமையானது...!

கிறிஸ்துவுக்கு முன் 776ம் ஆண்டு, ஒரு பௌர்ணமிநாள், கிரேக்கதேசத்திலுள்ள 'ஒலிம்பியா' என்ற கிராமத்திலே ஒரு ஓட்டப்போட்டி நடைபெற்றது. அன்றுதான் ஆதிகால ஒலிம்பிக்போட்டிகளின் ஆரம்பநாள்... அந்தமுதலாவது ஓட்டப்போட்டியில் வெற்றிவாகை சூடியவன்... எலிஸ் (Elis) என்றஇடத்தைச் சேர்ந்த கொறீபஸ் என்ற கிரேக்க சமையற்காரன் ஒருவன்... அவன் ஓடியதூரம் 200 யார்... அவனுக்கு கிடைத்த பரிசு ஒலிவ் (Olive) இலைகளினாலும் தடிகளினாலும் தயாரிக்கப்பட்ட ஒருகிரீடம்.

ஆதிகால ஒலிம்பிக்போட்டிகளில்... முதல்13 போட்டிகளிலும் இவ்வோட்டப்போட்டி ஒன்றுமட்டுமே அங்கம்வகித்தது... ஏறத்தாள மைதானத்தின் நீளமான 200 யார்தூரத்திற்கு வீரர்கள் ஓடிப்பரிசு பெற்றார்கள். ஒலிம்பியாக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டதால் இப்போட்டிகள்ஒலிம்பிக்போட்டிகள் என்றுபெயர்பெற்றன. ஆரம்பத்தில் ஓட்டப்போட்டிகள் மட்டுமேநிகழ்ந்த இப்போட்டிகளில், நாளடைவில் குதிரைஓட்டம், தேரோட்டம் என்பனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டன... பின்பு இவைகளோடு குத்துச்சண்டை, மல்யுத்தம், ஈட்டி எறிதல், பரிதிவட்டம் வீசுதல் போன்ற போட்டிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.. இவைகளுக்கெல்லாம் வெற்றி விருதாகக் கிடைத்தது, விலையுயர்ந்த பரிசுகளல்ல முதல் ஒலிம்பிக் வீரனுக்கு கிடைத்த அதேஒலிவ் இலைக் கிரீடம் தான்...

ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு உண்மையான பரிசு, பங்குபற்றினோம், வெற்றிக்காகப் போராடினோம் என்றகௌரவம் தான்... விலையுயர்ந்த பரிசுகளுக்காக அவர்கள் அன்றும், இன்றும் போட்டிபோடவில்லை......

### கிரேக்கர்களின்

### வெற்றிவிழா

கி.மு. 776ல் ஆரம்பித்த ஆதிகால ஒலிம்பிக்போட்டிகள் படிப்படியாக வளர்ந்து, கி.மு. 5ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மகத்தான ஒருவிழாவாக முழுவளர்ச்சிபெற்று, கிரேக்க மக்களின் வெற்றிவிழாவாக, சமயவிழாவாக உறுதிபெற்று விளங்கியது...

இப்போட்டிகளைப் பற்றி ''பின்டர்'' என்ற கிரேக்க கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்... ''தண்ணீரைப்போல தெளிந்த, தங்கத்தைப் போலப் பிரகாசமான மதிய சூரியனின் வெளிச்சத்தை யொத்ததாக, விழாக்களில் சிறந்தமலராக இவைவிளங்கின......

சாதாரணமக்களுடன், சக்கரவர்த்திகளும் இப்போட்டிகளில் பங்குபற்றி பரிசுபெற விழைந்திருக்கிறார்கள். ரோமச் சக்கரவர்த்தியான நீரோ இப்போட்டிகளில் கலந்துகொண்டதாகவரலாறு கூறுகிறது

ஒலிம்பிக் போட்டிகள் நிகழும் காலத்தில் யுத்தங்கள் ஏற்பட்டாலும், அவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு, ஒலிம்பிக போட்டிகள் தடையின்றி நடைபெற வேண்டுமென்று புனித ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் கிரேக்கமக்கள். இப்போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை, மூன்று பக்கங்கள் உயர்ந்த மலைச்சிகரங்களாலும், ஒருபக்கத்தில் கடலாலும் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் அமைந்த 'ஒலிம்பியாக்' கிராமத்தில் நடைபெற்றன.

### உயர்ந்த

### கௌரவம்

சமய விழாவிற்குரிய கட்டுப்பாடுகளுடனும், சட்டதிட்டங்களுடனும் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் கிரேக்கநாட்டில் பிறந்தவர்களே பங்குபற்ற அனுமதிக்கப்பட்டார்கள். முன்பு எப்போதாவது சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகளாக கணிக்கப்பட்டவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றவே முடியாது. வெற்றிபெற்ற வீரர்களுக்கு சமூகத்தில் மிக உயர்ந்த கௌரவம் அளிக்கப்பட்டது. இவர்கள் தேசிய வீரர்களானார்கள். கவிஞர்கள், இவர்களின் புகழை கவிதைகளில் பாட, சிற்பிகளோ அவர்களது கம்பீரத் தோற்றங்களையும், அழகையும் சலவைக் கற்களில் சிற்பங்களாகவடித்து வைத்தார்கள். வெற்றிவாகை சூடி, தனதுபிறந்த ஊருக்குத் திரும்பும் ஒருவீரனுக்கு, போர்க்களத்தில் வெற்றி பெற்றுத்திரும்பும் ஒருவீர தளபதிக்கு அளிக்கப்படும் வரவேற்பைப்போல வரவேற்பளித்து, கௌரவித்தார்கள், அக்கால கிரேக்கமக்கள்......

### ஆதிகால

### சரிதம் முடிவு

சிரேத்தசித்திரம், இசை, இலக்கியம் ஆகியவற்றிலெல்லாம் இடம்பிடித்து, மக்களின் அபிமானத்தைப்பெற்ற இவ்வொலிம்பிக் போட்டிகள் தொடர்ந்து 12 நூற்றாண்டுகள் நடைபெற்றன. ஆனால், காலப்போக்கில் இப்போட்டிகளின் உயர்ந்த லட்சியம் அழிக்கப்பட்டு, கிரேக்கதேசத்தைக்கைப்பற்றிய ரோமர்களின் ஆட்சிக்காலத்திலே, பணத்திற்காக நிகழும்' கொடூரமான, நேர்மையற்ற போட்டிகளாக உருவெடுத்தன... கடைசியாக கிறிஸ்துவுக்குப்பின் 394ம் ஆண்டில், ரோமச் சக்கரவர்த்தியான தியோடோசியஸ் தனதுமத போதகர்களின் ஆலோசனைப்படி, தன்னால்கைப்பற்றப்பட்ட கிரேக்கநாட்டின் மகத்தான விழாவான ஆதிகால ஒலிம்பிக்போட்டிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்... இத்துடன் ஆதிகால ஒலிம்பிக் போட்டிகளின் சரிதம்முடிந்து விட்டது.

### மீண்டும்ஒலிம்பிக்

சென்றநூற்றாண்டின் இறுதிக்காலத்தில், ஜெர்மன் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆதிகால ஒலிம்பிக்போட்டிகள் நடாத்தப்பெற்ற ஒலிம்பியாக் கிராமத்தில் அகழ்வு நடத்தி, பழைய விளையாட்டு அரங்கு, பயிற்சிமண்டபம், தேரோடும் பாதை என்பனவற்றைக் கண்டுபிடித்தார்கள்... அதைத்தொடர்ந்து மீண்டும் மக்கள் மனதில் ஒலிம்பிக் போட்டிகளின் நினைவு தோன்றியது. அந்த முக்கியமான கட்டத்தில், பிரான்ஸ் நாட்டிலிருந்து ஒரு குரல் ஒலித்தது.....

''உலக அமைதிக்கும், சமாதான சகவாழ்விற்கும் தூண்டுகோலாய் அமைய மறைந்துவிட்ட ஒலிம்பிக் போட்டிகளை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்'' அந்தக் குரலுக்குரியவர் பிரான்ஸ் நாட்டுப் பெருமகனான பாரொன் பீரிடி கொபட்டின் என்பவர்... அவர் ஒரு விளையாட்டு வீரரல்ல... ஆனால் சிறந்த கல்விமான், பொதுநலவாதி. 1892ம் ஆண்டு நவம்பர் 25ம் திகதி சோபோன் நகரில் நடைபெற்ற உடற்பயிற்சிக்கழகக் கூட்டத்தில் பின்வருமாறு அவர் கூறினார்... ''எங்கெங்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றனவோ, அந்த நாடுகளுக்கெல்லாம், எங்கள் நாட்டு வீரர்களை அனுப்பி, அங்கே பல்வேறு கலைகளிலும் தேர்ச்சிபெற்றவர்கள் எம்முறைகளை கையாளுகிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து கொள்ள உதவும் சுதந்திரமான கருத்துப்பரிமாறல்எதிர்காலத்துக்கு அவசியம் ஐரோப்பாவில் இந்தச்சுதந்திரமான பரிமாறல் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ, அன்றுதான் சமாதானம் என்னும் புனித குறிக்கோளைநோக்கி மகத்தான ஒரு அடிஎடுத்து வைக்கப்படும்''

(தொடரும்)

### ஒலிம்பிக் போட்டிகள்பற்றி.

> ''தண்ணீரைப்போல தெளிந்த
> தங்கத்தைப் போலப் பிரகாசமான
> மதியசூரியனின் வெளிச்சத்தை யொத்ததாக
> விழாக்களில் சிறந்த மலராக இவை
> விளங்கின''
>
> - பின்டர்
> (ஒரு கிரேக்க கவிஞர்)

---

# யாழ்ப்பாணத்தில்

# 'வித்தி'க்கு மணிவிழா!

பல்துறை வித்தகர் பேராசிரியர் 'வித்தி'க்கு மணிவிழா என்ற பெருவிழாவை யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை கலை இலக்கியபத்திரிகை நண்பர்கள் எடுக்கின்றனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என்ற பெருமைமிக்கப் பதவியிலிருக்கும் சு. வித்தியானந்தன், கல்வித்துறைக்கு மட்டுமல்ல, கலைத்துறைக்கும், இலக்கியத்துக்கும் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. இந்த நூற்றாண்டில் 'வித்தி' நமக்குக்கிடைத்தது குறித்து நாமும் பெருமைப்படலாம்.

கொழும்பில் கடந்தகாலத்தில் பலவிழாக்களைத் திறம்பட நடாத்தியவர்கள் கலைஇலக்கிய பத்திரிகை நண்பர்கள். காங்கேசன்துறையில் நடிகமணி வி. வி வைரமுத்துவின் மணிவிழாவைசிறப்பாக நடாத்தினார்கள்.

இந்தக்கலை இலக்கியபத்திரிகை நண்பர்கள் செயலாளர் எஸ். திருச்செல்வம் துடிதுடிப்பும்' சுறுசுறுப்புமிக்க இளைஞர் ஒரு விழாவை எப்படி வெற்றியுடன் நாடத்திமுடிக்கலாம் என்ற 'இரகசியத்தை' மிகவும் நன்கு தெரிந்துவைத்திருப்பவர்.

உழைக்கும் பத்திரியாளர் சங்கத்தின் தலைவரும், தினகரன்பிரதம ஆசிரியரும் வித்தியின் பல்கலைகழகமாணவரான திரு. ஆ. சிவகுருநாதன் தலைமையில் இந்த மணிவிழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழா காலைபத்து மணியிலிருந்து நண்பகல் பன்னிரண்டு பதினைந்துவரை நடைபெறும். பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் இவ்விழாவில் 'வித்தி'க்கு புகழ்மாலை செலுத்துவார்கள்

'வித்தி' எழுதிய கட்டுரைகளிலிருந்து அவரால் எடுக்கப்பட்டு, தொடுக்கப்பட்ட பத்துக்கட்டுரைகள் 'வித்தியானந்தம்' என்ற பெயரில் நூலாகவும், மணிவிழாமலராக பல்வேறு [illegible] நன்கு புரிந்தவர்கள், எழுதுகிறார்கள். 'நுழைவாயி'லில் திரு. ஆர். சிவகுருநாதனும், சிவநேசச்செல்வனும் அறிமுகம் செய்கிறார்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் ஒவ்வொருதலைப்பில், 'வித்தி,யை நோக்குகிறார்கள் இலங்கையிலிருந்து வெளிவரும் நான்கு தமிழ் தினசரி ஆசிரியர்களின் வித்திபற்றிய கட்டுரைகள் இந்தமலரில் வெளிவருவது ஒரு புதுமை! இவர்களை இணைத்துவைத்த பெருமை கலைஇலக்கிய பத்திரிகை நண்பர்களைச் சேர்ந்தது

வித்தியின் இந்தமணிவிழாவில் மணியான இருபுத்தகங்கள் வெளிவரவிருப்பது குறிப்பிடக்கூடிய அம்சம்!

# இலக்கிய உலா

ஈ.கே.ஆர்

### 'ரஜனி'யில்

### கிடுகுவேலி

'ஈழநாடு' வாரமலரில் சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்திய 'செங்கை ஆழியானின்' 'கிடுகுவேலி' இவ்வாரம் நூலுருவில் வெளிவருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து 'ரஜனி' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாத வெளியீட்டின் முதல் இதழிலேயே இந்த நாவல் முழுமையாக வருவது குறிப்பிடத்தக்கது மாதம் தோறும் வெளிவரவுள்ள 'ரஜனி' இத

12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் மலர்ந்த காதல் பிரபந்தம்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை. தாம் கருத்திற் கொண்ட உவமேயத்துக்கு ஒருஉவமானம் கிடைத்ததே என்று உளம்மகிழ்ந்து, பாடினர். ''சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு இவளின் உயிர்தவச் சிறிதுகாமமோ பெரிதே''.

## மரபுமீறிய

## காதல்தான்

காதல்சொன்ன மடல்இலக்கியத்திலாவது, தூதுஇலக்கியத்திலாவது, உலாவிலக்கியத்திலாவது, தலைவன்இன்னன் இன்னஇயல்பினன், இன்ன ஊரினன், இன்னபேரினன் என்றெல்லாம் வருமேயல்லது' காதல்கொண்ட பெண்ணின் பெயர்வருவது மரபிலமைய வில்லை,

ஆனல் வெருகல் சித்திரவேலாயுதனர் காதலில் நாயகியாய் வருபவள் பெயர் கூறப் பட்டுள்ளது வேலாயுதனர் உலாவைக் கண்குளிரக் கண்ட மாதர் சிலர் விரகதாபமுற்ற விந்தையும், விதமும் விபரமும் விசித்திரமானவை.பேதை முதலாகப் பேரிளம் பெண்ணீருக நின்ற பெண்களுள் ஒருத்தி வாலமுத்து. அவள் கொண்ட மையல் பெரிது.

மையல் கொண்ட வாலமுத்து மலர் வனஞ்சென்று தனியிடத்தில் இருக்கிருள். வேலவரை நினைத்து உருகிய வேளையில் வேலவர் அங்கே சென்று கொண்டாடிப் போகிருர். அவரின் பிரிவால் அவள் வருந்துகிருள். அவ்வழியாகக் குறி சொல்லும் குறத்தி வந்து ஆறுதல் கூறிப் போகிருள். ஆற்ருமையால் வருந்திய வாலமுத்து வேலவரிடம் கிளியைத் தூதுவிடுக்கிருள். கிளி வேலவரிடம் பறந்து சென்று தூதுரைத்து மாலை வாங்கி வருகிறது.

## கலம்பக நிகழ்ச்சிகள்

காதல் எனப் பெயர் பெற்ருலும் இப்பிரபந்தத்திலே பல கலப்பு அகங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தூதுப் பகுதி மிக நன்ருக மனோதத்துவ நுணுக்கங்கள் விரவியுள்ளன. இரகசியமாக இருந்த காதல் நிகழ்ச்சியை உடையவளிடம் உரைப்பதாயினும் உரிய முறையில்,உரிய வேளையில், உரிய இடத்தில் உரைத்தல் முறை. அது கட்டுப்பாட்டோடு கூடிய ஒரு சம்பிரதாயம்.

தூதுரைக்கக் கூடாத வேளை சந்தர்ப்பம் சூழ்நிலைபல ''என்னைப்போல் மையல் கொண்ட ஏந்திழையார் பலரும் தூதனுப்பியிருப்பார்கள். அவர்கள் முன் சொல்லாதே. வீரவாகு தேவர் முதலான நவவீரர் தொழுது விண்ணப்பஞ் செய்யும்போது என் காதலைக் கூருதே. வித்துவான்கள் பாமாலைகள்தொடுத்துவந்து வேலவர் மெல்லடியிற் சூட்டும்போது என் காதலைக் கூருதே ''கண்டிநகரானும் கனகமுடி ராசசிங்கன் தொண்டனிடும் போதெனது சேதியை நீ சொல்லாதை'' வன்னிமை தேசத்தார் மகாநாடுதான் கூடி மின்னும்எழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே கோதில்புகழ் சேர்வீரக்கோன் முதலிதானியற்றும் காதல் அரங்கேற்றுகையில் காதல்தனைச் சொல்லாதை.

## மாவலிகங்கையை

## மறக்கவில்லை

இலங்கைக்கு வாழ்வளிக்கும் ஏழு நாங்கு மாவலியை அன்று முதல் இன்றுவரை தமிழ்புலவர்கள் பலர்தங்கள் நூல்களிற் புகழ்ந்துள்ளார்கள். மாவலிகங்கை காட்டுமிருகங்களை அடித்து உருட்டிக் கடலிடை சேர்ப்பதுபோல், கண்டியரசன் இராசசிங்கன் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரை தன் கைவாளால் வெட்டிவீழ்த்த அவர்களின் முண்டங்கள் இரத்த ஆற்றில்மிதந்து சென்றனவாம். சைவப்பற்றுமிகுந்த இரண்டாம் இராசசிங்கன் 1635—1687 வரை கண்டியில் அரசுசெய்தவன், மல்வானை, கன்னெருவ. மெனிக்கடவர என்னும் களங்களில் போர்த்துக்கேயர் பட்டபாடு வரலாற்றில் உள்ளது. இன்னும் சிக்கிலியாகம என்னும் களம் ஒல்லாந்தர் பட்டபாட்டை நினைவுசெய்யும். இராசசிங்கன் எவனுயினும் அவன்வெருகல் சித்திரவேலாயுதப் பெருமானைச் சிந்தையுருக வணங்கினன் என்பதுஉண்மையாகும்.

## இலக்கிய உலகு

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ழில், ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள், மாதாமாதம் இடம் பெறும். யாழ்ப்பாணம். 248/5, கே.கே எஸ் வீதியிலுள்ள ரஜனி பப்ளிகேஷன்ஸ் இந்த இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## திறமைசாலி

## விக்கினேஸ்வரன்

நமது ரூபவாஹினி தொலைக்காட்சியில் சமீபத்தில் ஒளிபரப்பான 'உதயத்தில் அஸ்த்தமனம்' என்ற 45 நிமிட நாடகத்தை தமிழக சஞ்சிகைகளே பாராட்டியுள்ளன. 'இந்துமகேசின் நாடகத்தை தொலைக்காட்சிக்கென எழுதியவர் பி.விக்கினேஸ்வரன். அவர்தான் இதன்தயாரிப்பாளர் கூட! யாழ்பாணத்தில் இதனை ஒளிப்பதிவு செய்வதற்கான பலசிரமங்களைப் பொறுத்துக்கெண்ட திறமைசாலியான இளைஞர் விக்கினேஸ்வரன். ரூபவாஹினி தமிழ் பகுதிக்குத் கிடைத்த முத்து இவர்!

## செம்பியனுக்கு

## சுகயீனம்

நமதுஎழுத்தாளர். செம்பியன் செல்வன் கடந்த மூன்றுமாத காலமாக சுகயீனமுற்றிருக்கிருர். யாழ். இந்து ஆசிரியராக இருக்கும் இவர் கடும் சுகயீனத்துக்கு பின் இப்போது குணமாகி வருகிருர். யாழ்.அத்தியடி வீதியிலுள்ள தனது இல்லத்தில் படுக்கையில் இருக்கும் செம்பியன் இலக்கிய களஞ்சியங்களைச் சந்திப்பதில் ஆறுதலடைகிருர்.

## வாழ்த்துக்கள்!

பத்திரிகையாளராக நம்மில் ஒருவராக சில காலம் இருந்து. இலக்கியத் துறைக்கு தன்னுலியன்ற பங்களிப்பைத் தொடர்ந்தும் செய்து வரும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் சூ.யோ. பற்றிமாகரன் தன் அன்புக்குரிய றீற்றுவைக் கைப்பிடித்துள்ளார்.

கவிஞராகவும், பேச்சாளராகவும் விளங்கும் சட்டத்தரணி கனக மனோகரன் பிரேவதனவைச் சந்நிதியான் சந்நிதியில் மணம்முடித்துக் கொண்டார்.

இந்த இரு இலக்கிய நெஞ்சங்களும், அந்த நெஞ்சங்களுக்குச் சொந்தமாகி விட்ட அவர்களின் இதயங்களுக்கும் இலக்கிய உலகம் வாழ்த்து [illegible]

# புதுமணம் ஊட்டும் சில புதுக்கவிதை மலர்கள்

புதுக்கவிதை என்னும்இலக்கியப் பொக்கிசம் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகால வரலாறு உடையது. புகழ்பெற்ற அமெரிக்கப் படிமக் கவிஞர் (Imagists) 'வில்ட்விட்மனின்' புல்'லின் நுனிகள்' கவிதைத் தொகுப்பும், மகாகவிபாரதியின் வசன கவிதைகளும், ந.பிச்சமூர்த்தியின் இலக்கிய நெஞ்சில் ஏற்படுத்தியதாக்கம் இப்புதிய படைப்புக்களின் பிறப்புக்கு காரணிகளாயின.

பிச்சமூர்த்தி பெற்றெடுத்த குழந்தையை பெரிதும்ஊட்டி வளர்த்தவர்களில் வல்லிக்கண்ணன், கு.ப ராஜகோபாலன் போன்ருேர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எந்தவொரு புதியசிந்தனைக்கும், செயல்பாட்டுக்கும் ஆரம்ப காலத்திலிருக்கும் எதிர்ப்பு புதுக்கவிதைகளுக் இருக்கவே செய்தது.

அடுக்கிய கட்டுரை வசனங்களை' அல்லஎனஇங்கு அழுத்தமாகச் சொல்லிவைக்கவிரும்புகிறேம்.

புதுக்கவிதையாளர், மு. மேத்தாவின் கவிதைநூல்களில் 'கண்ணீர்பூக்கள்' சிறப்புடையது. இந்நூல்மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம் ஏ. வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதொன்றே. இதன் சிறப்புக்கு சான்ருகும் சின்னஞ்சிறு வார்த்தைகளுக்குள் இயல்பாகவே காதலுணர்ச்சிகளைச் சேர்த்து வைப்பதில் மேத்தா கைதேர்ந்தவர். உதாரணத்துக்கு ஒன்று:

''நான் தென்றலாகத்தானே
வந்தேன்
நீ ஏன் உன்
சன்னல்களைச் சாத்தினுய்?
உன் வீட்டுக்
காற்றுக்குக் கூட
விஷப் பல் மூளைத்தது

## வாகரைவாணன்

அற்புதமான புதுக்கவிதையாளர், மு.மேத்தாசொல்வது போல் இலக்கணச் செங்கோல், யாப்புச்சிம்மாசனம், எதுகைப்பல்லக்கு, மோனைத் தேர்கள், பண்டிதபவனி,தனிமொழிச்சேனை— இவைஎதுவுமேஅற்ற, (நிராயுதபாணியான) புதுக்கவிதையைக் கண்டதும், மரபுப்பண்டிதருக்குக் கோபம்பொத்துக் கொண்டு வந்தது. கவிஞர்கண்ணதாசன் முண்டம்' எனமுத்திரை குத்தினர். பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் மோசமான சொல்லடுக்கு' எனப்பேசித் தள்ளினர்.

இத்தகைய எதிர்ப்புச்சுவர்களையெல்லாம் இடித்துநொருக்கிவிட்டு, ,மளமளவென வளர்ந்த புதுக்கவிதை, இன்று பல்கலைக்கழகங்களுக்கும் புகுந்து 'மக்களாட்சி' நடாத்துகிறது. இப்படி ஆட்சிசெய்யும்சிலபுதுக் கவிதைகளோடு தான்இங்கே நாம் உறவாடப் போகின்ருேம். மற்றப்படி இன்னுமொரு பிரபல புதுக்கவிதையாளர் அப்துல்ரகுமான் சொல்வதுபோல் 'கவிதைஎன்று அழைப்பதற்கு எந்தவித அருகதையுமற்ற துண்டுதுக்கடாக்கள், படமில்லாத நகைச்சுவைத் துணுக்குகள், கலாவடிவமற்ற வெறும் கருத்துநவிற்சிகள்' முறித்து எப்போது?

மேத்தாவின் சமூகப் பார்வையும் மிகமிகக் கூர்மையானது 'செருப்புடன் ஒரு பேட்டி' என்ற கவிதையில் இவர் இப்படிச் சீறுகிருர்:

''தீவிரமாக எதைப் பற்றி
யாவது நீங்கள்
சிந்திப்பதுண்டா?
உண்டு' சிலதேசங்களையும்
சில ஆட்சிகளையும்
பார்க்கும் போது
மீண்டும் நாங்களே
சிம்மாசனம்
ஏறிவிடலாமா
என்று
யோசிப்பதுண்டு''

ஏழை எளிய மக்களின் குமுறல்களை உள்ளடக்கமாகக் கொண்டு கவிதை எழுதுபவர் நா.காமராசன் அவர் சொல்கிருர்:

''ஒருகாலத்தில் புதுக்கவிதை மரபுப் பண்டிதரால் ஒதுக்கப்பட்டது சிலர் 'முண்டம்' என்றனர். ''சிலர் மோசமான சொல்லடுக்கு'' என்றனர். சிலர் ''வெற்றெனத் தொடுத்தல் என்றனர். ஆனல்இன்ருே புதுக்கவிதை விரைந்து வளர்ந்து பத்திரிகை சஞ்சிகை வானொலி இவைகளைக் கடந்து பல்கலைக்கழக ஆய்வுப் பொருளாகி உள்ளது.''

''ஏழைகளின் அடுப்பெரிப்
போம்
இல்லை எனில் சூரியனில்
தீக்குளிப்போம்''

ஏழைகளின் பிரதிநிதியாய் நின்று எக்காளமிடும் அவர், அந்த ஏழைகளின் இல்லாமையைச் சொல்லும் விதம் நம் உள்ளத்தை அப்படியே சுண்டி இழுத்து விடுகிறது. அந்த வரிகள்:

''நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிருேம்
ஆடை வாங்குவதற்காக''

பலரால் புரியவில்லை என்று சொல்லப்பட்ட 'பால் வீதி' அப்துல்ரகுமானின் ஒரு நல்ல படைப்பு. (இந்நூலும் மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்மருக்கிறது) அதில் ஓர் அழகிய கவிதை, 'மின்னல்' படிப்பவரின் கண்ணை அல்ல, கருத்தைப் பறித்துவிடும் அந்த ஒளிக் கீற்று இதுதான்:

வான உற்சவத்தின்
வாண வேடிக்கை
முகிற் புற்று கக்கும்
நெருப்புப் பாம்புகள்
கறுப்பு உதட்டின்
வெளிச்ச உளறல்
இடிச் சொற் பொழிவின்
சுருக்கெழுத்து''

வானத்தில் தன் பார்வையைப்பூட்டி மின்னலின் வனப்பில் மயங்கிய அப்துல்ரகுமான் மண்ணுலகப் பிரச்சனைகளை மறந்து விடவில்லை 'மக்களாளாட்சி' என்னும் போர்வையில் நடைபெறும் பொதுத் தேர்தலின் மாய்மாலத்தை தனது எழுத்துக்களால் கீறிக் கிளறுகிருர்:

''புறத்திணை சுயம்வர மண்
டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி',

போலித்தனமான பொதுத் தேர்தலை எழுதிக் காட்டிய அப்துல் ரகுமான் ஆண்டவனைக் கேட்பது போல் நாடாளும் அரசாங்கங்களையே கேட்கின்ருர்:

வரங்களே சாபங்களாகு
மென்ருல்
இங்கே தவங்கள் எதற்காக?

புதுக் கவிதையாளர்களில் தமிழ்நாடன் குறிப்பிடத்தக்கவர். சீரும் சிறப்புமாக வாழும் சினிமா நட்சத்திரங்களின் ஆரம்ப வாழ்க்கையை இப்படி அவர் பிட்டு வைக்கிருர்:

''சின்ன நட்சத்திரமே
சின்ன நட்சத்திரமே
சினிமா நட்சத்திரமாவதற்
குள்
உன்னுள் எத்தனை
கால் நிலா அரை நிலா
பூத்துச் சிதைந்தன''

சமூக உணர்வைக் கிளறி விடும் விதத்தில் பைபிளிலுள்ள வாக்கியங்களை வைத்து புவியரசு எழுதிய கவிதை போற்றத்தக்கது:

'பூமியில் சிந்தப்பட்ட
எல்லா நீதிமான்களின்
இரத்தத்திற்கும்
உங்களிடம் பழிவாங்கப்ப
டும்''

தங்களது அபிமானத் தலைவர்களின் வெற்றிகரமான அரசியல் யாத்திரைக்காகச் சில அப்பாவித் தொண்டர்கள் மேற்கொள்ளும் மயான யாத்திரையை அரங்கநாதனின் இரண்டு வரிக் கவிதைகள் இப்படி எடுத்துச் சொல்லுகின்றன:

''வேலியைப் பாதுகாக்க
மடிகின்ற பயிர்கள்''

ஆங்கில இலக்கியத்தில் எம் ஏ. பட்டம் பெற்றவரும் புதுக்கவிதையாளரும், திறனுய்வாளருமான பாலா தமது பூக்காரியை அறிமுகப்படுத்தும்விதம் ரசிக்கத்தக்கது.

''அதோ வருகிருள்
எங்கள் பூக்காரி
நெஞ்சில் புரளும்தன்
செங்கூந்தலில் ஒரு
சின்னக் கண்ணி
பூவுமில்தாது
அதோ வருகின்ருள்
எங்கள் பூக்காரி.''

காலம்சென்ற பேராசிரியர் கைலாசபதி குறிப்பிட்டுள்ளது போல ,தமிழ்கவிதையின் மூன்ருவது காலகட்டமாக' விளங்கும் புதுக்கவிதைகளின் எதிர்காலம் செழிப்பாக இருக்கும் என்பதற்கு மேலேசுட்டிக் காட்டப்பட்ட கவிதைகள் சான்ருக விளங்குகின்றன.

## நண்புக்கும் பண்புக்கும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஷ்ண நிலைமை புதியமக்கள் புதியமொழி புதியசூழ்நிலை இவையெல்லாவற்றையும் வெற்றிகரமாக கையாண்டு பிரியாவிடை பெற்ருேம். அரபுமக்கள் கூறுவார்கள் ஒரு முறை நைல்நதியின் தண்ணீரை குடித்தால் இன்னுமொருமுறை அருந்த போக வேண்டும்மென்று ஆனல் எங்களுக்கு அப்படி நடக்கவில்லை. ஒருநல்ல மக்கள் நைல்நதியையே முக்கியமாக நம்பிவாழ்கிருர்கள். கடவுள் நம்பிக்கையும் சமூக முன்னேற்றத்தையும் அடிப்படையாகக்கொண்டு வாழ்கிற மக்கள் இவர்கள் இவர்கள் எதிர்காலத்தில் சிறப்பாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ இன்று கொடியேற்றம்



தீர்த்தக் கரையில் வீற்றிருக்கின்றது. கோணேஸ்வரமோ, நிலும் முதலிய நகரங்களைப் போல இங்கேயும் காலத்துக்குக் காலம் அடுக்கடுக்காக நாகரிகங்களும், நகர அடுக்குகளும் தோன்றி நிலவி மறைந்தன. பிரதானதுறைமுகப் பட்டினமாக நிலவிய மாந்தையில் நூற்றுக்கணக்கான அணிகலன்கள் வந்துபோயின. 10ம் நூற்றாண்டு அநுராதபுரக் கல்வெட்டிலும், 11ம் நூற்றாண்டு இராசேந்திர சோழன் கல்வெட்டிலும், சதிர்சமக் கல்வெட்டிலும் திருக்கேதீச்சரம் பற்றிய குறிப்புகள் உள்ளன

# கேதீச்சரம் சென்று தீராவினை தீர்ப்போம்

இறைவன், ஏகன், கருத்தா, கடவுள் என்று திருமுறைகள், சாஸ்திரங்கள் கூறும் மேலான பரம்பொருளான ஈசன் எங்கும் நிறைந்திருப்பவன். உலகமும் உயிரும் இயங்குகின்றன. அவன் தானே இயங்கி அவற்றை இயக்குகிறான். அவ்வாறு இயக்குவதற்குக் காரணம் உயிர்களிடம் அவனுக்குள்ள கருணையே. அவன் உள்ளத்திலே கருணை சுரக்கின்றபடியால் ஆண்டவன் அவற்றுக்கு உலகை வைக்கின்றான்.

சரித்திரப் பிரசித்தி பெற்றதும், தேவாரம் பாடல்பெற்றதுமான திவ்ய தலமான திருக்கேதீச்சரம் மாதோட்டம் அல்லது மாந்தை என்ற பெரிய நகரில், பாலாவி என்னும் என ஆரம்பிப்போர் கூறுவர். அதனாலும், மகாதொன்மையாம், மாந்தை பண்டைய கதிரவனும் பல்லும் ஆகிய பற்றியும் இத்தலம் பற்றிக் கூறப்படுகின்றது. இங்கு கோயில் கொண்டருளியிருக்கும் பெருமானை, கேது பூசித்து அருள்பெற்றதனால் இத்தலம் திருக்கேதீச்சரம் எனப்பெயர் பெற்றது என்பர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் முறையாக அமைந்தபதி திருக்கேதீச்சரமாகும். கேது, மயன், மகாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் முதலாம் பெருந்தவத்தோர்கள் முறை நிறை வழிபட்டு அருள்பெற்றுய்ந்த வரலாறுடைய தலம் இதுவாகும். தேவர்கள் இங்கு அர்த்தசாமப் பூசை செய்வதாக ஒரு ஐதீகமும் உண்டு. சுந்தரமூர்த்தி நாயனார் ஊடாக நோக்கினால்,

**எஸ். ஸி. எஸ். சிதம்பரநாதன்**

கேதீச்சரத்திறைவன் சாந்த மூர்த்தியாக உறைகின்றார். அவன் துண்டப்பிறைசூடி, அரைதன்மேல் அரவார்த்து பணிசூழ் செய்த மையேரிலை உமையாளொடும் இருக்கின்றான். அந்த உருத்திரதாண்டவ சோமாஸ்கந்த மூர்த்தமாகத் திருக்கேதீச்சரத்தில் கண்டார் சுந்தரர். இறைவன் ஏகனுமாய் இருக்கின்றான். ஒன்றுப்பலமாய் ஒரு வெளியாய் இருக்கின்ற சிவனின் அருவத் திருமேனியையும், உருவத்திருமேனிகளையும், அருவுருவாய் மகாலிங்கத்தையும்கண்டு மகிழ்ந்தார் சுந்தரர். அவர்பாடிய கேதீச்சரநாதர் எவ்விதம் அடியார்களுக்கு அருள் செய்கின்றார்? அடியார்க்கு வரும் வல்வினைகளை ஒழிக்கும் இவபெருமான் அவைகளிற்று நோய்களை

(15ம் பக்கம் பார்க்க)

## பாலாவிக் கரையுள்ளானே!

பொன்னொளிர் மேனி தன்னில்
வெண்பொடி அணியும் நாதன்
வெண்ணிலா சடைமேல் வைத்துப்
பேரருள் புரிந்த நாதன்
தன்னிலோர் பாகம் தன்னைக்
கௌரிக்குத் தந்த நாதன்
வெண்ணலை எழுந்து ஆர்க்கும்
பாலாவிக் கரை யுள்ளானே!

நாடுவார் நலிவைப் போக்கி
நலம்பல நல்கும் நாதன்
பாடுவார் வினைகள் நீக்கிப்
பதமளி அருளும் நாதன்
தேடுவார் உள்ளக் கோயில்
நாடியே உறையும் நாதன்
ஆடுவார் பிணிகள் தீர்க்கும்
பாலாவிக் கரை யுள்ளானே!!

ச. முருகையா

## கேதீஸ்வரத்தானே போற்றி!

தற்போதத் தலைவர்தந் தவமே போற்றி
தாகமுடன் வருவார்க்காந் தானே போற்றி
நற்போத நெறிகாட்டும் நாதா போற்றி
நாளெல்லாம் நம்முடனும் நடுவே போற்றி
வித்தோலாய் விதள்பூத்த விளக்கே போற்றி
வெம்பகைக வஞ்சாது விலக்பே போற்றி
செற்றோனுக் கருமணியுஞ் சிவனே போற்றி
திருக்கேதீஸ்வரத்தானே போற்றி போற்றி

மூவர்பணி முத்தமிழ் முழுங்கே போற்றி
மூவாத பெரிய முதலே போற்றி
சீவர்பணி கொண்டருளுஞ் சிவனே போற்றி
தேறுதல ஞானமருள் தேசா போற்றி
ஏவர்பணி யீசனெனு மினியாய் போற்றி
ஏதுமறி யாருளத்து மிருப்பாய் போற்றி
தேவர்பணி தேவாதி தேவே போற்றி
திருக்கேதீஸ்வரத்தானே போற்றி போற்றி

பொங்குநலந் திகழுமிற் பூக்காய் போற்றி
போதாத மெய்காட்டும் புனிதா போற்றி
சங்கதமும் தண்டமிழும் தருவாய் போற்றி
சற்குருவாம் வந்தருளுந் தவமே போற்றி
எங்குமாந் தகவாக இனியாய் போற்றி
ஏழண்டத் தப்பாலாம் எழிலாய் போற்றி
செங்கமலத் தாளிணையிற் சேர்ப்பாய் போற்றி
திருக்கேதீஸ்வரத்தானே போற்றி போற்றி

ச. தங்கமாமயிலோன்

# றேகனின்பீகிங் 'யாத்திரை'யும் கிம் இல் ஸுங்கின் மாஸ்கோ விஜயமும்

அமெரிக்க ஜனாதிபதி றேகன் தனது சீன விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்




கொண்டுள்ளார். திரு. றேகன் பீகிங் வந்து சேருகின்ற தறுவாயில், தாம் அவருடன் நடாத்தப்போகும் பேச்சுவார்த்தைகளை அந்த அவற்றின் அடிப்படையில் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களாகும். ரஷ்ய-சீன உறவுகளின் நலன்களுக்கு எவ்விதத்திலும் ஊறு விளைவிக்க ஏற்படுத்தாது எனச் சீனத் தலைவர்கள் மாஸ்கோவுக்கு ஜாடைமாடையாக உணர்த்தியிருந்தனர், அனுறும் பீகிங் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் தனது ஒத்துழைப்பு உடன்படிக்கையைச் செய்து கொள்ள அமெரிக்காவும், சீனாவும் இணங்கியமை ரஷ்யாவுக்கு இயல்பாகவே எரிச்சலூட்டுவதாக இருக்கலாம்.

இது தொடர்பான இரண்டின் மனத்தாங்கல்கள் அடுத்த மாதம் வட கொரிய ஜனாதிபதி கிம் இல் ஸுங் மாஸ்கோவுக்கு மேற்கொள்ளவுள்ள விஜயத்தின்போதும், அவர் ரஷ்யத் தலைவர்களுடன் நடாத்தவுள்ள பேச்சுவார்த்தைகளின் போதும் வெளிப்படும் பெறலாம் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர் சீனா என்ற எடுத்துக்கொண்டுள்ள சில புவியியல்-அரசியல் கருத்து நிலைப்பாடுகள் தமக்கு இணக்கமானவையல்ல என்பதை மாஸ்கோ வடகொரியத் தலைமைக்கு உணர்த்தியே திரும்பவும் இவர்கள் மேலும் தம் பிக்கை தெரிவிக்கின்றனர்.

கடந்த பதினேழு ஆண்டுகளில் முதல் தடவையாக வட கொரிய ஜனாதிபதியொருவர் ரஷ்யத் தலைநகருக்கு விஜயஞ் செய்யவுள்ள தருணத்தில், இருதரப்பு உறவுகள் தொடர்பான பிரச்சினைகள் உட்பட, கொரியாவை மீண்டும் ஐக்கியப்படுத்தும் பிரச்சினை, வட கொரியா-தென் கொரியா - அமெரிக்கா ஆகியனவுடன் கலந்துகொள்ளும் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் பற்றி அண்மையில் பியோங்யாங் முன்வைத்த பிரேரணை முதலான பிரச்சினைகளும் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் பற்றிய வட கொரியப் பிரேரணையை மாஸ்கோ ஆதரித்த அவ்வேளையில் பீகிங் நிராகரித்ததையும், வாஷிங்டனினது தூண்டுதலின் பேரிலேயே பீகிங் இவ்வாறு நடந்துகொண்டது என அவ்வேளை

**வெரி. சண்முகநாதன்**

யில் பல அரசியல் அவதானிகள் கருத்துக் காட்டியதையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இதற்கும் பதில் ஏற்பாடாக வட கொரியா-தென்கொரியா-வாஷிங்டன்-சீனா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் நாற்தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதுபற்றி வாஷிங்டன் முன்வைத்த பிரேரணையைப் பியோங்யாங் நிராகரித்திருந்தது.

தமது மாஸ்கோ பேச்சுவார்த்தையின்போது, ஜனாதிபதி கிம் இல் ஸுங் எடுத்துக்கொள்ளவுள்ள நிலைப்பாட்டைக் கொண்டே கிம் இல் ஸுங் எவ்வளவு ரஷ்யாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் 'சம தூரத்தில்' ஒதுங்கியிருக்கும் தனது பாரம்பரிய கொள்கை எத்துணை தூரம் மாறக்கூடும் என்பதனை உணர்த்தும்.

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியப்புலவரின் இன்தமிழ்ப்பணி

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல இஸ்லாமிய கவிஞர்கள் உதித்து மறைந்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவைகளும் அவர்கள் பரப்பிய கவிதைக் கதிர்களும் இன்னும் மறைந்துவிடவில்லை. அவை காலத்தால் அழிக்கப்படமுடியாதனவாகும். இளமைகோடி எழில் தந்தமிழன்னையின் அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்களாக இலக்கியங்களைப் படைத்து புகழுடைய்தி வர் வண்ணம் தமிழ்ப்புலவர்கள். பெருங்காப்பியங்களையும் சிறுபிரபந்தங்களையும் யாத்துத் தமிழ் தொண்டாற்றிய செந்தமிழ் செல்வர்களுள் இஸ்லாமிய புலவர்களும் சிறந்த இடம்பெறுகின்றனர்.

தமிழ்நாட்டு முஸ்லிம் புலவர்கள் தங்கள் புலமைத் திறமையினை தமிழ் மொழியில் நிலை நாட்டியுள்ளார்கள். ஏன் நமது ஈழ நாட்டிலும்கூட வாழ்ப்பாணத்து பதுறுத்தீன் புலவர், இலங்கை முஸ்லிம் புலவர்கள் தங்கள் புலமைத் திறமையினை நிலைநாட்டி உள்ளனர். இவர்கள் தமிழுக்கு இலக்கிய பாரத்தோடு அமைவாத இஸ்லாமிய மரபு காத்து தமிழ் இலக்கிய வழியில் இலக்கண வரம்புகளுக்குள் நின்று காவியங்களைப் படைத்தும் பெரும் புகழ் பெற்றுள்ளார்கள். இதனுள் ஏனைய மதங்களைச் சார்ந்த தமிழ்ப்புலவர்களுக்கிணையாக பிறிதொரு கிராமமும் இஸ்லாமிய புலவர்களின் தமிழ் கவிதை செய்யும் பணியில் கலந்தது. எனவே இப்படி இஸ்லாமிய மரபு காத்து தமிழ் இலக்கண வரம்புக்குள் நின்று தமிழுக்குத் தொண்டாற்றிய பல இஸ்லாமிய புலவர்களில் முக்கியமான சிலரை நாம் மேலோட்டமாக நினைவது கூர்வது பொருத்தமானதாகும்.

தமிழகத்தில் இஸ்லாமிய மாளிகையென்னும் காவியக் கலை ஆக்கிய இஸ்லாமிய சான்றோர்களில் சீறாப்புராணம் செந்தமிழ் புலவர் வரிசையில் சிறந்து விளங்கும் இஸ்லாமிய பெருங்கவிஞர்களுள் குணங்குடி மஸ்தான் சாகிபு புலவரும் குறிப்பிடத்தக்கவராவார். 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களிலும் இப்புலவர் பெருங்கீர்த்தியுடன் விளங்கினார். தமிழுலகிற்கு இவர் அளித்த செல்வங்கள் பல. இவர் இயற்றிய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களுள் மிகச் சிலவே அச்சுவாகனம் ஏறி வெளிவந்தவையாகும். மெய்ஞான அருள்வாக்கி, வித்துவ தீபம் போன்ற இவரின் நூல்களைப் பயிலுவோர் பெரும்

## முகம்மது சுல்த்தான் ஜினூஸ்

பாடிய உமறுப்புலவர் முக்கியமானவர். திருநெல்வேலிச் சீமை எட்டயபுரத்தையடுத்த நாகலாபுரத்தில் ஹிஜ்ரி 1052 இல் ஷேகு முதலியார் என்பவரின் மகனாகப் பிறந்த உமறுப்புலவர் தமது 63 ம் வயதில் எட்டயபுரத்தில் வபாத்தானார்கள். இவர் இயற்றிய சீறாப்புராணம் மிகப் புகழ்வாய்ந்ததாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவர் ஒரு ஒளி வீசும் நட்சத்திரமாகத் திகழ்கிறார்.

பாக்கியம் பெற்றோராவார்கள். இவரின் பேரின்ப ரஞ்சித மாலையே காலத்தால் முந்தியதாகும்.

இஸ்லாமிய தமிழ் புலவர்களின் வரிசையில் தனிப்பெரும் புகழ்கொண்டவர். புலவர் நாயகமவர்கள். இது இவரது சிறப்புப்பெயராகும். இவர் தமிழில் மாத்திரமின்றி அரபியிலும் சமஸ்கிரதத்திலும் பாண்டித்தியமுள்ளவர். இவர் ஒரு அறிஞராக கவிஞராக, மெய்ஞானியாக திகழ்ந்தவர். ஹிஜ்ரி 1236ல் புலவர் நாயகம் புதுாபுஷ்ஷாம் புராணத்தை பூர்த்தி செய்தார்.

இஸ்லாமிய இலக்கிய வரலாற்றில் இதுபோன்ற பல புலவர்கள் தமிழுக்கு அருள் சேர்த்தவர்களாக காணப்படுகின்றார். புலவர் காசீம், தீன் விளக்கம் எனும் காப்பியங்களை இயற்றிய வண்ணக் களஞ்சிய புலவர் என வழங்கப்படும். ஹாமித் இப்ராஹீம், நாகூர்ப்புராணம் இயற்றிய குலாம் காதிறு நாவலர் போன்றவர்கள் மிளிர்ந்து விளங்குகிறார்கள்.

## சேவியத்தில் பத்திரிகைகள்

சோவியத் யூனியனில் 1984 ஜனவரி முதல் "த்ருத்" என்னும் தொழிற் சங்கப் பத்திரிகை ஒரு கோடி 54 லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன. இப்பத்திரிகை சுமார் 5 கோடி பேர் படிக்கின்றனர்.

இந்தப்பத்திரிகை தனது சந்தா தாரர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் இதன் ஆசிரியர் குழுவுக்கு சுமார் 6,80,000 கடிதங்கள் வந்தன. பல்வேறு பிரேரணைகளும், குறிப்புகளும், வேண்டுகோள்களும் குறைகூறல்களும் அடங்கிய கடிதங்கள் அவை. ஒவ்வொரு கடிதத்திற்கும் விரிவான பதில்களும் விளக்கங்களும் அளிக்கப்பட்டன. 1,000க்கு மேற்பட்ட கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன மற்றும் 1,000 கடிதங்கள் "வாசகர் விருப்பம்" என்ற தலைப்பில் கட்டுரைகள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன. ஏனைய கடிதங்கள் அவற்றில் கண்டுள்ள பிரச்சினைகளின் தீர்வுக்காகச் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டன வாம்.

தகவல்: நரேந்திரனே பிரகுமார்

## சிறுகதை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளத்தில் செப்புவிக்கும் கவிஞனின் இனிய நினைவுகளோடு அவன் வீட்டுக்குப் போனான்.

ஹாலில் மாமா அமர்ந்திருந்தார். மாமா மிகவும் நல்லவர். சின்னவயதில் அவன் தாய்தந்தையை இழந்துவிட்ட நாள் தொட்டு தம் குடும்பத்தின் நன்மை தீமைகளில் பங்கெடுத்து அக்கறை காட்டுபவர் அவர்... அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் தானோ என்னவோ சீலனிடமும் வசந்தியிடமும் நிறைய அன்பு வைத்திருக்கிறார்.

சாரத்தை அவிழ்த்து கனும் கால் முடுவுமதுக்கட்டிக்கொண்டான். கொழும்பில் மட்டுமல்ல... உலகின் நாகரீகமான எந்தப் பகுதியில் வாழ்ந்துவிட்டாலும்... இதுபோன்ற பண்பாடுகளிலிருந்து அவனால் விடுபட முடியாது... இது அவன் மாமாவின் வயதுக்குத் தரும் மரியாதை.

மாமாவுக்கு முன்னே அம்மா அடங்கி ஒதுங்கிப் போய் நின்றாள். அவனும் அம்மாவுக்குப் பக்கத்தில் போய் நின்றான்.

"சீலன்! பொம்பிளைப்பிள்ளையை காலாகாலத்தில் கரை சேர்த்துப்போடவேணும் வசந்திக்கு ஒரு நல்ல இடம் வந்திருக்கு... பெடியனும் நல்ல தங்கமான குணம். ஆனா சீதனம் தான் அதிகமாயிருக்கு...' என்று சீலனை நிமிர்ந்து பார்த்தார் மாமா.

'அதற்கென்ன... இருக்கிறது முழுக்க அவளுக்குத்தானே...' என்பதுபோல மாமாவைப் பார்த்தான் சீலன். மாமா புன்னகைத்தபடியே தலையாட்டிவிட்டுச் சொன்னார்...

'சீலன்...! நான் அதற்கும் ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன்... உனக்கும் வசதியாக ஒரு இடம் வந்திருக்கு... பொம்பிளையும் நல்ல [illegible] நேரில் போய்ப் பார்க்க வேணும் என்று நீ விரும்பினாலும்... போய்ப்பார்க்கலாம்...'

மாமா அவனிடம் போட்டோவை நீட்டினார். நடுங்கும் கரத்தை நீட்டி அதைப்பெற்றுக்கொண்டான் சீலன்...

'அண்ணியைப் பார்ப்பம்... போட்டோவைத் தா... என்று அவனிடம் போட்டோவைப் பிடுங்கிக்கொண்டாள் வசந்தி. அவளுடைய முகத்தில் குமுறல் சேர்ந்தாய் மகிழ்ச்சி தெரிந்தது.

'என்னால இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க முடியாது... நான் மதியைக் காதலிக்கிறேன்...' உதடுவரை வந்த நின்றவார்த்தைகளை விழுங்கிக் கொண்டான் சீலன்.

அவனுடைய தந்தை இறந்த பொழுது அவன் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவன் 'ஏ' லெவல் படிக்கக் கல்லூரியில் சேர்ந்தான்.

'இவனை எப்பிடிப் படிப்பிக்கப் போறீ?... பேசாமல் பள்ளிக்கூடத்தால நிறுத்தி எங்கையாவது புடவைக்கடையிலைவிடு...' என்று ஊர் சனங்கள் அவனுடைய அம்மாவுக்குப் புத்தி சொல்லுவார்கள். அப்போதெல்லாம் அம்மா சொல்லுவாள்.

'நான் என்ன பாடுபட்டும் அவனைப் படிப்பிப்பன்... அவன் படிச்சு நல்ல உத்தியோகத்துக்கு வந்தா... வசந்திக்கும் நல்ல வாழ்க்கை அமையும்...'. அவன் படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தபோதுகூட அம்மா சலிக்கவில்லை. எத்தனை இன்னல்கள்... எத்தனைக்கும் பொறுமையாக அம்மாதான் மனம் தருவாள்.

'என்ன சீலன் யோசிக்கிறாய்...' மாமா அவன் சிந்தனையைக் கலைத்தார்.

'ஒன்றுமில்லை மாமா... நீங்கள் தங்கச்சியின்ரை கலியாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கோ...' என்றான். ஆனால் இதயத்தின் ஒரு மூலையில் பனித்துளி இழைப்பு... ஏமாற்றம்... மெளனமாக வலித்தது.

[illegible]

## ஞானமூர்த்தி எழுதுகிறார்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே நேரத்தில் இனவிடுதலை இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாயிருக்க வேண்டிய கட்டத்தில் பாராளுமன்றப் பதவி மோகமும் குடிகொண்டமையால் இரண்டு நெல்லிக்காய்கள் போல மறுபடியும் சுயநல வேட்டையில் சடுபட்டு ஒருவரை யொருவர் தாக்கி வந்த வகையில் ஒரே அணியிலுள்ளவர்களும் கூட முழு விடுதலை இயக்கமுமே இன்றுபின்னடைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையை அரசாங்கமும் அவதானித்து பாராளுமன்றத்திலேயே எங்களது பலவீனத்தைப் பகிரங்கமாகப் பிரஸ்தாபிக்க முனைந்துள்ளது. இந்நிலையை எங்கள் பலவீனமாக கொண்டே பெரும்பான்மையினர் மக்கள் சென்ற ஆடிக் கலவரத்தைத் தயக்கமின்றித் தொடங்கியிருக்கலாமெனவும் ஊகிப்பதில் தவறில்லை.

### மீண்டும் ஒற்றுமை

### முயற்சி

மேலே சொல்லப்பட்ட அனர்த்தமான சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்பதாகவே எதிர் நோக்கியுள்ள தமிழர் நிலைமைச் சீர்படுத்தும் நோக்கமாக எமது தலைவர்களுக்கு அவகாசம் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அக்கட்டத்தில் அவர்களுமே மீண்டும் கட்சிகளுக்குள் ஒற்றுமை நிலவச் செய்யவேண்டிய அத்தியாவசியத்தை உணர்ந்திருந்தமையால் அப்பணியில் ஈடுபடுமாறு கற்பித்தனர்.

அதுவுமே அடுத்த பிரதான கட்சியாகிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரைக் கொழும்பில் சந்தித்துப் பலதரப்பட்ட அபிப்பிராயபேதங்களைப் பெருமளவில் களையக்கூடியதாயிருந்தது. ஈற்றில், கூட்டணியினர் குறிப்பிட்ட செயலாளரை வரவழைத்துக் கருத்துப் பரிமாறிக் கொண்டு எஞ்சிய தப்பபிப்பிராயங்களும் களையப்படும் நிலை இருந்தது. ஆனால் இக்கட்டத்தில் துரதிர்ஷ்டவசமாகக் கூட்டணியினர் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான சில சூழ்நிலைகள் ஏற்பட்டமையாலும், இதற்கிடையில் வேறு நிகழ்வுகள் இடம்பெற்றமையாலும் எடுக்கப்பட்ட முயற்சி பாழடைந்தது.

### உள்ளிருந்து

### கொல்லும் வினை

மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு பிரதான குழுவின் அங்கத்தவராயிருப்பவரும், 'சுதந்திரன்' பத்திரிகையின் அதிபராயிருப்பவரையும் அண்மையில் திருமலையில் சந்தித்து 'மழைக்கு முளைக்கும் காளான் போல' அண்மையில் உருவாக்கிய ஓர் கட்சியின் கொள்கைகளைக் கூட்டணிக்கு எதிராக அப்பத்திரிகை மூலம் பிரசாரம்செய்ய அனுமதிப்பதுமில்லாமல் தாமுமே மாறுவேடமாக்கிரமங்களை வெளிப்படுத்துவதன் விளைவுகளைப் பணிவுடன் விளக்கியுள்ளேன். பெரும்பாலான எனது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட போதிலும் ஏனைய விடயங்களைப் பரிசீலனை செய்வதற்காகக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் என்னைச் சந்திப்பதாக உறுதிமொழி கொடுத்தும், அவர் அங்ஙனம் செய்யவில்லை.

ஆனால், அவர் என்னுடன் ஏற்றுக் கொண்டமைக்கு மாறாக மேலும் தட்டிதவொண்டது. பேதங்களை ஆற்றுவதற்குப் பதிலாகத் தொடர்ந்தும் களைத்தங்களை உருவாக்கும் இடமென்றே ஊகிக்கக்கூடியதாயிருந்தது.

எங்ஙனமாயினும், ஊன்றும் பரந்த நோக்குடனும் கிரமமாக விளங்கியவரும், அரசியல் ஒழுக்கத்தில் தலைசிறந்தவராய் எதிராளிகளுடைய மதிப்பையும் பெற்றிருந்த எங்கள் மறைந்த தலைவரின் புதல்வன்றவகையில் கட்டுத்தோரனை விவகாரங்களை மனதிற் கொள்ளாது, இன்று தமிழினம் தள்ளப்பட்டிருக்கும் அவல நிலையை மனதிற்கொண்டு கூட்டணிப் பிரமுகர்களுடன் ஒராய் இணைந்துசெயல்படுமாறு தமிழ் மக்கள் விளையத்துடன் வேண்டி நிற்கின்றனர்.

இதேபோன்று தமிழ்க் காங்கிரஸ் செயலாளரும் பெருமனதுடன் நடந்துவரும் வட்டமேசை மாநாட்டுக்கு முன்பதாகவே கூட்டணியுடன் ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமென இப்பகுதி மக்கள் ஆவலுடன் வேண்டி நிற்கின்றனர்.

எமது இனம் சிறுபான்மைச் சமூகமாயிருந்தும்கூட - சாபக் கேட்டினாற்போலும் - காலத்திற்குக் காலம் பிளவுபட்டு மிகவும் தாக்கமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஆகவே, தனிப்பட்ட நபர்களோ ஏனைய கட்சிகளோ சுயகௌரவத்திற்கானசபோடுகளை மறந்து பொது நலச் சேவைக்காக தம்மை அர்ப்பணித்து, தமிழ் தாயின் பெயரில் ஆணையிட்டு ஒன்றிணைந்து தமிழனினமைக் காக்குமாறு வினயத்துடன் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

"அதேநேரத்தில் முன்னணி ஸ்தாபனமாகிய கூட்டணியினரே காலம் தாழ்த்தாது மறு கட்சிகளுக்கும் பிரிந்து நிற்கும் தனி நபர்கட்கும் அழைப்பு விடுத்து மனம்விட்டுப்பேசி ஒன்றுபட்டு முன்மாதிரிகாட்டி வெற்றியுடன்செயல்பட உதவுமாறு ஆண்டவனையும் வேண்டி நிற்கின்றோம்.

1971ல் ஒருமித்திணைந்த பொழுதே முன்பிருந்த தமிழரசுக் கட்சியையும் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் ஏனைய கட்சிகளையும் கலைத்து விட்டிருந்தால் மறுபடியும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பிரச்சினை உருவாகியிராதல்லவோ.

ஆகவே இனிமேலாகுதல் உடன் நடவடிக்கை எடுத்து தமிழினம் ஒரு கொடியின்கீழ் இயங்கினால் அதன் ஆதிக்கமும் மதிப்பும் சொல்லாமலே விளங்கும். அன்றியும் ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஓர் ஸ்தாபனத்துடன் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது அரசாங்கத்திற்குமே இலகுவாயிருக்குமென்பதே முக்கியமானதாகும்.

"ஒற்றுமை கொடுக்கும் இரண்டாம் மிதக்கு"

## கண்ணிருந்தும் குருடன் யார்?

- ஓர் உண்மை உள்ளம் கண்ணாடி போன்றது உடைந்தால் பொருத்த முடியாது
- ஓர் உண்மை அன்பை நினைத்த காலத்தில் எச்சத்தையிலும் வாங்க முடியாது
- மனச் சாட்சியின் கேள்விக்குப் பதில் அளித்தால் நீதிமன்று போகத் தேவையில்லை
- அடுத்தவன் துன்புறும்போது அதை ரசித்துப் பார்ப்பவன் கண்ணிருந்தும் குருடனாகிறான்
- அன்பு எனும் கூரிய ஆயுதத்தால் எந்தக் கோட்டையையும் நினைத்த ஆழத்தில் உடைக்கலாம்

தொகுப்பு 'பிலே'r

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரா** (யாழ். நகர்)
இன்று மட்டும்
10-30, 2-30, மட்டும்
சிவகுமார் - அம்பிகா
மதனமாளிகை

**ராணி** (யாழ். நகர்)
சக்கரவர்த்தி
திருமகள்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ரவிச்சந்திரன், பாரதி
தங்கத்தம்பி
உன்னதமான குடும்பச்
சித்திரம்

**றீகல்** (யாழ். நகர்)
6th to 10th
Daily 10-30 2-30
Christopher Lee......
SAFARI 3000
Action -Racing - Thrilling
இது போன்ற ஆங்கிலப்
படத்தை இதற்குமுன்னும்
பார்த்திருக்க மாட்டீர்கள்.
இனிமேலும் பார்க்கமாட்
டீர்கள், அரிய சந்தர்ப்பம்.
தவறவிடாதீர்கள்.

**ஸ்ரீதர்**
மறுஅறிவித்தல் வரை
10-30, 2-00 மணி மட்டும்
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
மறு அறிவித்தல் வரை
2-30 காட்சி மட்டும்
கமலஹாசன்-ஜெயசுமித்ரா
சகலகலாவல்லவன்

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30 மட்டும்
விஜயன் - ராஜேஷ்
சத்தியகலா - சுருளி
தனிமரம்
(புதிய வண்ணப் பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
ரவீந்தர் - சுதா
ஒரு தலை ராகம்

**வெலிங்டன்**
M. G. R. நடித்த
தினசரி 10-30, 2-15
நம் நாடு
(புதிய வண்ணப்பிரதி)

4-5-84—8-5-84
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 1-30
4-00
Harison Ford
BLADE RUNNER
(Scope Color)
Action Packed Thriller

**வின்ஸர்** (யாழ் நகர்)
Daily 10-30, 2-00 4-00
SNAKE IN THE
EAGLE'S SHADOW
Snake
Cumfu — Karate
கொழும்பில் தொடர்ந்து
157 காட்சிகளை நிறைந்த
காட்சிகளுடன் 100 நாட்
களுக்கு மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்

# பாராளுமன்ற ஆயுள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இத் தமிழ்க் கட்சிகளை ஓர் அமைப்புக்குள் கொண்டுவந்து தமிழ்மக்கள் ஒற்றுமையாக நின்று ஒரே குரலில் தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டுமென்றமுயற்சிவெற்றி பெற்றது. வல்வெட்டித்துறை திரு. கே. ஞானமூர்த்தி இம் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார். தமிழ்க் கட்சிகளைக் கொண்ட கூட்டணி உருவாக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது மாநாடு வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்ற ஊரில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் கூட்டணியின் தலைவர்களாக திரு. எஸ். ஜே.வி.செல்வநாயகம், திரு.ஜி. ஜி பொன்னம்பலம், திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் தலைவர்களாகத் தெரிவு செய்யப் பெற்றார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சுகுமார திரு. கே. டபிள்யூ. தேவநாயகமும் சேர்ந்திருந்தார்.

வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல் மாநாடு மிக முக்கியமான ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம் தான் பின்னர் இலங்கையில் சமீபகாலத்தில் ஒரு "இராஜத் துரோக" வழக்கு ஒன்றுநடைபெறுவதற்கும் இந்த வழக்கின் மூலம் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேர்ந்து வழக்கை நடத்தி அதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்யவும் காரணமாயிருந்தது.

## இராஜத்துரோக குற்றச்சாட்டு

1976-ஆம் ஆண்டுமே மாதம் 22-ஆம் தேதி இலங்கைக்குடியரசு தினவு தினம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

இத்தினை வடக்கு கிழக்கு மாகாணங்கள் பகிஷ்கரித்தன. இந்நாளில் தமிழ்த்தலைவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வாசகத்தை அச்சிட்டுத் தமிழ்ப்பகுதியில் மக்களுக்கு விநியோகித்தார்கள்.

யாழ்ப்பாண நகரில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மக்களுக்குக் கூறியதற்காக மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டியதற்காக இத் தீர்மானப் பிரதியை விநியோகித்தவர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டனர் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வ. ந. நவரத்தினம், கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகிய நால்வரும் பத்து நாட்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

இதன்பின் "இராஜத்துரோகம்" செய்ததாகக் குற்றஞ்சாட்டி இந்நால்வர் மீதும் கொழும்பில் மூன்று நீதிபதிகள் கொண்ட மேல் நீதிமன்றத்தில் அரசு வழக்குத்தொடர்ந்தது.

(தொடரும்)

Uduvil Girls' College
UDUVIL

FURTHER EDUCATION PROGRAMMING

(1) A full time course in

**Computer Programming and Data Processing**

THE 3rd BATCH STARTS ON 20—05—1984

Lecture and Practicals :
WEEK DAYS FROM 9-00 A.M. TO 2-00 P.M.
DURATION 4 MONTHS

MODULES :

| | | |
|---|---|---|
| MODULE I | : | Introduction to computing and Data processing. |
| MODULE II | : | (a) Programming in BASIC Language (Practicals hours more than 30 hours on a COMMODORE 64 business computer.) |
| | | (b) BASIC - FILES (for Job-seekers in business firms) (practical hours 20 hours) |
| MODULE III | : | PROGRAMMING IN COBOL LANGUAGE with PRACTICALS. |
| MODULE IV | : | PROGRAMMING IN RPG II LANGUAGE. |
| MODULE V | : | PROGRAMMING IN FORTRAN LANGUAGE. |
| MODULE VI | : | SYSTEM DESIGN (for a Programmer cum Analyst) |
| MODULE I—II | : | ............1,500/- |
| MODULE III | : | ..........1,000/- (Language 500/- Practical 500/- |
| MODULE IV, V—VI | | ..........500/- |

(Apply on or before 15-05-84)

(2) A full time course for I.D.P.M. Part I—II Examination London)
Starts on 20-5-84. Both parts Rs. 1,200/-
Duration time.. 6 months for both parts I—II
(Apply before 15-05-1984)

(3) Home Economics Courses in
(a) Dress making
(b) Cake Decoration
(c) Interior Decorations. Duration 1 year

(4) Social Graces
Duration 2 months Rs. 300/- full course
Lectures and practicals...week days 8 30 A.M. to 3 P.M. Course starts on 15-05-1984.

(5) Veena and Guitar classes on Tuesdays and Fridays 1 to 4 P. M.

# கேதீச்சரம் சென்று

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

யும், ஊனமின்றியும் ஒழிகின்றவராகக் காண்பர். கேதீச்சரத்தானின் அடியார்களின் பிறவிப் பிணியோடு உடற்பிணியையும் போக்குகின்றார் தொண்டர்கள் சூழப்பாலாவிக்கரையில் தாருகவே விரும்பி அமர்ந்துள்ளார் சிவபெருமான் அத்தலத்தின் தீர்த்தமகிமையினாலே, அவர் அங்கு "இடமாய் உறைகின்றார்" என்றார் சுந்தரர்.

திருக்கேதீச்சரத்தின் சிறப்புக்களை, மூர்த்தி விசேடங்களை இறைவனின் திருப்பாலிப்பை அருளுள்ளத்தை, அடியார்க்கடியாராகும். வித்தைகளை வினைகள் அறுக்கும் வேதமுதல்வனின் திருவிளையாடலை திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் அருளிய திருமொழிகளிலும் காணலாம், கேதீச்சரநாதனைத் தொழுபவர்களுக்கு வினைகள் அடையா என்பதைப் பலவாறாகவிளக்கி வலியுறுத்திக்கூறுகிறார் பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் ஆகிய மூவகை வினைகளிலும் பிராரத்துவ வினைப்பயனை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பிராரத்துவவினை முழுவதும் இப்பிறவி இருக்கும்போதே அனுபவித்து முடியவேண்டியது. கேதீச்சரநாதனை வணங்கி அருள்பெறுவோர்க்கு அவ்வினையின் பயனும் தம்மை அணுகும் இன்ப துன்பதாக்கங்கள் இல்லை. "வேடமாது கேதீச்சரந் தொழுதெழும் பெருமிடர் வினை தானே" என்றும் "மாதோட்டத்தன்னல் நண்ணு கேதீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே" என்றும் சம்பந்தர் கூறுகிறார். திருஞானசம்பந்தர் மூலம் திருக்கேதீச்சரத்தைக் காண்போமானால், அங்கு அருள்வெள்ளம் பொலிவினைக் காணலாம். இடர்கெடுத்து உய்த்த நிற்கும் அடியார் கூட்டத்தைக் காணலாம். அதற்கு மேலாக நம்மையெல்லாம் வருக என்றழைத்து இன்னருள் புரிகின்ற ஒப்புயர்வற்ற திவ்யவனமும் போற்றும் மாவிலைமூர்த்தியைக் காணலாம், திருநாவுக்கரசர் தமது திருத்தாண்டகத்தில் "பூவணம் பொன்னிறத்தன், பூம் நூலர், பொங்கரவர் சங்கரவர் வெண்குழையோர் காதர், கேதீச்சர மேவினார்" எனப்பாடியுள்ளார்.

சோழரும், பாண்டியரும் திருப்பணிகள் பல செய்ததும், வன்னிநாட்டரசரும் யாழ்ப்பாணத்தரசரும் இறையுணர்ச்சியராக நித்திய நைமித்திகங்கள் நியமமாகச் செய்து வளர்க்கப்பட்ட பெருமைக்குரிய திருப்பதிதான் திருக்கேதீச்சரம் மூன்று முழு நூற்றாண்டுகளுக்கு மேலாகக்கோவில் இல்லாமல் தமிழ் வேதமாகிய தேவாரத்திருவுருவில் மட்டுமே திருக்கேதீச்சரப் பெருமான் உறைந்திருந்தார் காலச் சுழற்சியில் சிக்குண்டு சிதைவுற்று அழிந்து மண்மேடாகும் நிலை ஏற்பட்டது இத்திருத் தலத்தைக் கண்டறிந்து புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் முதல் முதல் ஈடுபட்டவர் 19ம் நூற்றாண்டில் சைவத்தின் விடிவெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே பின்னர் சேர். கந்தையா வைத்தியநாதன் திருப்பணிகளுக்கு மூலவேராக இருந்து நற்தொண்டாற்றினார். புனருத்தாரண வேலைகளுக்கு செல்வந்தர்களான ராம அரு பழனியப்பச் செட்டியாரும் கண்ணாப் பண்ணை இராமநாதச் செட்டியாரும் முன்னின்றுழைத்தனர்

திருக்கேதீச்சரநாதன் அருவாயும் உருவாயும் அருவுருவாயும் அமைந்திருக்கின்றார் சௌபாக்கியமான திருக்கேதீச்சரப் பெருமான் பாதாரவிந்தங்களைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு போக்கான வினைகளெல்லாம் போக்கி அல்லல் துடைத்து துன்பம் நீக்கி துயர் அகற்றி அருட்செல்வம் பொருட்செல்வம் யாவும் பெற்று வாழ்வோமாக.

## ☆ மாங்கல்யம்

மாங்கல்யம் புனிதமானது அது ஒன்பது இழைகளால் ஆனது. ஒன்பது தங்கங்கள் பின்னி முறுக்கியே மாங்கல்யம் செய்யப்படுகிறது இந்த ஒன்பதுஇழைகளும் காயத்திரி மந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

1. வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.
2. ஆற்றல்
3. மேன்மை
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்
6. உத்தமகுணங்கள்
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இந்த ஒன்பது பண்புகளையும் ஏற்றுக்கொள்வதாகவே தாலிஅமைக்கப்படுகின்றது.

— அனுஷியா

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலாந்து ★ கனடா
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்

AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99-2/56 B, கபூர் பில்டிங்
2-வது மாடி கொழும்பு-1.
போன்: 549860

538 B, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 24689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 குதிரை சக்தியுள்ள அவுட்போட்மோட்டார் யந்திரம் துப்பாக்கிமுனையில் கொள்ளை

## ஊர்காவற்றுறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

40 குதிரை சக்திகொண்ட அவுட்போட் மோட்டார் இயந்திரம் ஒன்று இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஊர்காவற்றுறை துறைமுகத் தடியில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையே பாதை சேவையில் ஈடுபடும் "அவுட்போட் மோட்டார்" இயந்திரமே கொள்ளையடிக்கப் பட்டது.

சம்பவதினம் பிற்பகல் 4-15 மணியளவில் வழக்கம்போல் ஊர்காவற்றுறை துறைமுகத் தடியில் "பாதை" கொண்டு வந்து நிறுத்தப்பட்டதாம். பின்னர் அதிலுள்ள அவுட் போட் மோட்டார் இயந்திரத்தை அப்புறப்படுத்தி, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைப்பதற்கு "பாதை"யில் கடமையாற்றும் ஊழியர்கள் எடுத்துக்கொண்டு செல்லும் பொழுது, கார் ஒன்றில் திடீரென வந்திறங்கிய 3 இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திவிட்டு, "அவுட்போட் மோட்டார் இயந்திரத்தை" காரில் தூக்கி வைத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார்களாம்.

### காரும் கடத்தப்பட்டது

மேற்படி இயந்திரத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்திய கார், ஊர்காவற்றுறைச் சந்தியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாகவும், இக்கார் கண்ணுப்பாணில் அநாதரவான நிலையிலிருக்க நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி கொள்ளைச்சம்பவம் தொடர்பாக ஹெலிகொப்டர் மூலமும் நேற்றுக்காலை ஆயுதப் படையினர் தேடுதல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். (மா)

---

# மரண அறிவித்தல்

## டாக்டர் ராஜன் செல்லையா

டாக்டர் ராஜன் செல்லையா லண்டனில் 4-5-84-ல் காலமானார். இவர் சேகிலியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் செல்லையா, திருமதி செல்லையா அவர்களின் புதல்வனும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்வநாயகம் மட்டக்களப்பு ஆகியோரின் மருமகனும், பிரதிபா, பிரசன்னு, பிரவீந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலா அல்போன்சஸ், பேராசிரியர் பாலன் (யாழ். பல்கலைக்கழகம்), செல்வி (அதிபர் உடுவில் மகளிர் கல்லூரி), டாக்டர் ஜெயா, சந்தி (கனடா), சாந்தினி ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார். ஈமக்கிரியைகள் 9, Limes Avenue, London N 12 இல் வியாழன் நடைபெறும். 8189

---

# மரண அறிவித்தல்

## வயிரமுத்து வில்வலிங்கம்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த வயிரமுத்து வில்வலிங்கம் காலமானார். இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன மேற்பார்வையாளரும் இளைப்பாறிய ஆசிரியை தங்கம்மாவின் அன்புக்கணவரும், மனோரஞ்சிதராணி, பாலஸ்காந்தன், மனோரம்மா, சந்திரகாந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், யோகலிங்கத்தின் மாமனாரும், சுரேஸ், ஜெயந்தி, சுதர்ஷன், தயந்தி ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் (6 5 84) இன்று காலை 10 மணியளவில் ஏழாலை மேற்கில் நடைபெறும்.

தகவல்: திருமதி தங்கம்மா வில்வலிங்கம். (8193)

---

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு வரதராஜன்

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர் (Petty Officer) மார்க்கண்டு வரதராஜன் காலமானார். இவர் தற்குணேஸ்வரியின் அன்புக்கணவரும், முன்னாள் கடற்படை ஊழியர் மார்க்கண்டு திருமதி மார்க்கண்டுவின் புதல்வரும் திரு/திருமதி நாகமுத்து பொன்னுத்துரை (இணுவில்) ஆகியோரின் மருமகனும், யாழ்ப்பாணம் கிராண்ட்பாஸ் விளம்பர நிறுவனத்தின் முகாமையாளர் தவபாலன் (சஞ்) வசந்தா, வரதபாலன், வனிதா, வசந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு பஞ்சலிங்கம் (நியூவிஷன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அருமை மாமனும், பாக்கியலட்சுமி, தியாகராஜன் (மே ஜேர்மனி), தனபாக்கியலட்சுமி, செல்வராஜன் (சவூதி அரேபியா), பூபாக்கியலட்சுமி, ஆனந்தராஜன் (நெற்கொழுகத்திணைக்களம்), ராஜரஞ்சனி, இராசநாயகம் (சவூதி அரேபியா), ஜெயரஞ்சனி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர் திரு கனகரத்தினம், திரு. மகாலிங்கம் (மதீனா), பாலசுந்தரம் (வர்த்தகர், அச்சுவேலி) கந்தசாமி, மகேஸ்வரி (பிறிமா விஷுவேஷன், கொண்டாவில்), நடேசலிங்கம் (சவூதி அரேபியா), பத்மராணி, நாகேஸ்வரி (யாழ். கச்சேரி), ஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் நம்பர் 234/6, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(8191) மனைவியும் பிள்ளைகளும்.

---

### துணைவேந்தர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைப்பாறியப் பிறகு வேலைகளைப் பல்வேறு துறைகளையும் சேர்ந்த கிராமுகர்களின் ஆக்கங்களைக்கொண்ட "மணிவிழா மலர்" விழாவில் வெளியிடப்படும். அது மட்டுமன்றி, பேராசிரியரால் எழுதப்பட்ட பத்துக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூலொன்றும் "சித்தியகாலத்தம்" என்ற பெயரில் வெளியிடப்படவுள்ளது. இரு நூல்களையும் "கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள்" வெளியிடுகின்றனர்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-00 | 'சைவநீதி' — இந்துசமய நிகழ்ச்சி |
| 6-30 | எதிர்கால நிகழ்ச்சிகள் |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | கல்வி நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | விளையாட்டு நிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | இசைநிகழ்ச்சி |
| 9-05 | விவரணச்சித்திரம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'மிச்சலி' — தொலைக் காட்சி சித்திரம் (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச்செய்தித் தலைப்புகள் |
| 10-35 | 'மிச்சலி' தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு |

---

வடபகுதியைச் சுற்றிப்பார்த்த

# கனேடிய சட்டத்தரணி வெளியிட்ட கருத்து

(யாழ்ப்பாணம்)

வடபகுதி இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பகுதியாகக் காட்சியளிப்பதாக, வடபகுதியைப் பார்வையிட்ட மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்தவரும், கனடாவைச் சேர்ந்த சட்டத்தரணியுமான செல்வி நொவல் ஜெப்டிக் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்திருந்த செல்வி ஜெப்டிக் கடந்த இரு நாட்களாக வவுனியா, யாழ். மாவட்டம் ஆகிய இடங்களில் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்து உரையாடினார்.

மேலும் கோப்பாய் முன்னாள் எம். பி. திரு. சி. மு. இலகசுந்தரம், யாழ். மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் திரு. க. நடராசா, யாழ். ஆயர் உட்பட பலரையும் இவர் சந்தித்து வடபகுதி நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

கனடாவில் இருக்கும் இலங்கை அகதிகள் நலனில் மனித உரிமை இயக்கமும் சிறந்த அக்கறைகாட்டி வருவதாகவும் அவர் சொன்னார்.

இவர் நேற்றுக் காலை திருக்கோணமலைக்கும் புறப்பட்டுச் சென்றார். (மா)

---

# தெ. ஆபிரிக்க பிரதமரின் பிரிட்டிஷ் விஜயம்

(லண்டன்)

தென்னாபிரிக்க பிரதம மந்திரி போத்தா அடுத்த மாதம் முற்பகுதியில் பிரிட்டனுக்கு விஜயம் செய்யவிருப்பது பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரின் அழைப்பின்மீது வருகை தரவிருக்கும்போத்தாவுக்கு எதிராக பிரிட்டனின் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முனைந்து வருகின்றன.

பிரிட்டனிலுள்ள வெள்ளையரல்லாதவர்களை அவமதிக்கும் செயலாகும் திரு. போத்தாவின் விஜயம் என்று எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

கிளிநொச்சி

# கல்வி அலுவலகத்துக்கு கட்டிடம் அமைக்கக் காணி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நிரந்தரமான கல்வி அலுவலகத்தினை அமைப்பதற்கான காணியினை கிளிநொச்சி நகரத்திற்கு அண்மையில் ஒதுக்கிக் கொடுக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெகநாதன் முன்வந்துள்ளார்.

தற்போது கல்வி அலுவலகம், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய கட்டடமொன்றிலேயே இயங்கி வருகிறது.

நிரந்தர கட்டடம் 18 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிளிநொச்சி மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### ராகேஸ் சர்மா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் பேசுகையில், "உணர்ச்சி பொங்க ஊர் திரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர்களை விமானநிலையத்தில் விமான படைத்தலைவர், அரசியல் பிரமுகர்கள், சோவியத் ராஜ்ய பிரதிநிதிகள் ஆகியோர் வரவேற்றனர்.

இவருடன் விண்வெளிக்கு சென்ற இரு சோவியத் விண்வெளி வீரர்களும் இந்தியாவுக்கு வந்துள்ளனர். இந்த மூவருக்கும் இம்மாதம் 1-ந் திகதி "அசோக சக்ர" விருது வழங்கப்படவுள்ளது. (ரு)

---

### இலங்கைத்தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பினரால் படு மோசமாகத் தாக்கப்பட்டுவருவதாகவும் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தூதுக்குழுவினர் பிரதமரிடம் வற்புறுத்தியதாக தெரியவந்திருக்கிறது.

இத்தூதுக்குழுவில் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு சட்டமன்றத் தலைவர் ராஜாசேகர், அ.தி. மு. க. கட்சியைச் சேர்ந்த எம். எம். பாலசுந்தரம், மற்றும் குமரி அனந்தன், ஆண்டித்தேவர், மூப்பனார் இன்னாரில் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

---

# நவீனசந்தை வைரவசுவாமி கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய நவீனசந்தை ஸ்ரீ ஞான வைரவசுவாமி கோவில் கும்பாபிஷேகம் இன்று பகல் நடைபெறவுள்ளது.

சுவாமி திருவுலா ஆஸ்பத்திரி வீதி, கே. கே. எஸ். வீதி, பஜார் வீதி வழியாக நடைபெறும். நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் தலைமையில் நாதஸ்வரக்கச்சேரி நடைபெறும். பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சுவாமி விஸ்வநாதக்குருக்கள் நிறைவு செய்வார். (செ)

0 0 0

மாவிட்டபுரம் சோதிவேம்படி ஸ்ரீ காளிதேவி அம்மாள் நூதன பிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

அன்று மாலை திருவிளக்குப் பூசையும் நடைபெறவுள்ளது.

---

# மரண அறிவித்தல்

## வி. யோவாம்பிள்ளை

ஏழாலை இழக்கைச் சேர்ந்த யோவாம்பிள்ளை (பொலிசார்) காலமானார். அன்னார் அன்மேரியின் அன்புத் தந்தையாவார். விக்கி, லூஸ் திருஞானம், பாலசுந்தரம் ஆகியோரின் பேரனுமாவார். நல்லடக்கம் ஞாயிறு காலை 10-00 மணிக்கு நடைபெறும். 8199

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மேற்கு வீதி, 93ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number, 0032/36/81 Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu Telephone: 22389 24136.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org